
www.padippakam.com

ஜுன், ஜுலை'94 மக்கள் கலை இலக்கியக்கழக மாத இதழ் விலை: ரூ.3

# புதிய கலாச்சாரம்



தாழ்த்தப்பட்டோர் மீது தாக்குதல்:

## தப்படிக்க மறுத்த கட்டைவிரல் வெட்டு!

படிப்பகம்

www.padippakam.com



# பழையன கழிதல் காலத்தின் விதி!

தஸ்லிமா நஸ்ரீன் - பங்களாதேஷ் முல்லாக்களை நடுங்க வைக்கும் ஓர் எழுத்தாளர்; கவிஞர்; நாவலாசிரியர். அயோத்தி பிரச்சினையையொட்டி அவர் எழுதிய அவமானம் எனும் நூலுக்காக முஸ்லீம் மதவெறியர்களால் வேட்டையாடப்பட்டவர்.

அண்மையில் ஸ்டேட்ஸ்மேன் பத்திரிக்கையில் 'குர்ஆன் காலாவதியாகிவிட்டதாக' நஸ்ரீன் பேட்டி கொடுத்திருந்தார் என்று பிரச்சினை ஒன்று கிளம்பியது. தஸ்லிமா மறுப்பு ஒன்றை வெளியிட்டார். ''மக்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கிற குரான், வேதங்கள், பைபிள் போன்ற எல்லா மதநூல்களும் 'இடப் பொருத்தமில்லாதவை, காலப் பொருத்தமில்லாதவை' எந்த சமூக வரலாற்று நிலைமைகளில் அவை வெளியிடப்பட்டனவோ அந்த சந்தர்ப்பத்தை நாம் கடந்து விட்டோம். எனவே அந்தக் கருப்பொருள் நம்மை வழி நடத்தக் கூடாது. அவற்றை முழுவதும் திருத்த வேண்டுமா வேறு ஏதாவது செய்ய வேண்டுமா என்ற கேள்விக்கே இடமில்லை. நாம் முன்னேற வேண்டுமானால், பழைய நூல்களைக் கடந்து நாம் போக வேண்டும். நமது ஆன்மீகத் தேவைகளுக்கு நாம் மனித நேயத்தையே புதிய நம்பிக்கையாகக் கொள்வோம்.'' -இதுவே அவரது அறிக்கை.

இதை அடுத்து வங்காள தேச அரசு அவரைக் கைது செய்ய உத்தரவு பிறப்பித்தது. முஸ்லீம் மதவாதிகள் அவரது தலைக்கு விலை பேசியுள்ளார்கள். நாடெங்கும் மதவெறியர்களின் ஆர்ப்பாட்டம், ஊர்வலங்கள் நடக்கின்றன; தஸ்லிமாவின் வீடு அவரது தந்தையின் வீடுகளின் மேல் குண்டுகள் வீசப்படுகின்றன; அவர்கள் மீது அரசு எந்த வழக்கும் போடாமல் வேடிக்கை பார்க்கிறது.

இஸ்லாம், பெண்களை நடத்தும் விதம் பற்றி ஒளிவு மறைவில்லாமல் தஸ்லிமா விமரிசிக்கிறார். ''எங்களது மதம் (இஸ்லாம்) பெண்களுக்கு எவ்வித மனித மதிப்பையும் வழங்கவில்லை. பெண்களை அடிமைகளாக நடத்துகிறது. பெண்கள் ஆண்களின் விலா எலும்பிலிருந்துதான் உருவாக்கப்பட்டாள் என்று இஸ்லாம் கூறுகிறது. அதனால் தான் இஸ்லாத்தை எதிர்த்து எழுதுகிறேன். பெண்கள் மனிதர்களாக நடத்தப்பட வேண்டுமானால், அவர்கள் மதங்களிலிருந்து வெளியேறி வாழ வேண்டும்'' இவை ஆஸ்திரேலிய தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் தஸ்லிமாவின் பதில்கள்.

இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்த தஸ்லிமா பகுத்தறிவைக் கொண்டு அதை விமரிசிக்கிறார். இஸ்லாமியரல்லாதவர்கள் இஸ்லாமை விமரிசித்தால் 'அவர்களுக்கு ஒன்றும் தெரியாது' என்று சமாளிக்கும் முல்லாக்கள், இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்த தஸ்லிமா இஸ்லாம் மதத்தை விமரிசிக்கும் போது அவரை மிரட்டுகிறார்கள். முன்பு சால்மன் ரஷ்டி: இன்று தஸ்லிமா.

மத நம்பிக்கை இல்லாத நாம், மத நம்பிக்கை கொண்ட மக்களின் மத உணர்வுகளைப் புண்படுத்த முனைவதில்லை. ஆனால் அறிவின் துணை கொண்டு தஸ்லிமா போன்றோர் விமரிசனம் செய்யும் போது, அதற்குப் பதிலளிக்கத் துப்பில்லாத கோழைகளான மதவெறியர்கள் விமரிசனம் செய்பவர்களை வேட்டையாடுகிறார்கள்.

ஆனால், தஸ்லிமா கேட்கிற கேள்விக்கு பதில் அளிக்கப்படாமலேயே இருக்கிறது. 'குரான் காலப்பொருத்தமில்லாதது', என்ற விமரிசனத்தை மறுத்து 'அது காலப் பொருத்தமுள்ளதுதான்' என்று வாதமும் ஆண்மை மதவெறியர்களுக்கு இல்லை.

இஸ்லாம் உள்ளிட்ட எந்த மதத்தின் வரலாறும் வெற்றி வரலாறு அல்ல; தோல்வியின் வரலாறுதான். 1200 ஆண்டுகளில் குரானுக்கு ஒரே ஒரு நிலையான வியாக்கியானம் இல்லை. எத்தனையோ குழுக்கள், எத்தனையோ விளக்கங்கள், எத்தனையோ நம்பிக்கைப் பிரிவுகள். இவை ஏன்? கரிஜைட்டுகள், மூர்ஜஜைட்டுகள், குதிரைட்டுகள், ஹன்பலைட்டுகள் என்று பல பிரிவுகள் ஏன்? பல வர்க்கங்கள், மற்றும் ஆதிக்கத்திலிருந்த நபர்களுக்கேற்ப இந்தப் பிரிவுகள் இருந்தன. எகிப்திய அறிஞர் டாக்டர் தாஹா ஹுஃஸைன் குறிப்பிடுவதை வைத்துப் பார்த்தால் மக்காவின் குரைஷி இன மக்கள், மதீனாவுக்கு இடம் பெயர்ந்து சென்ற முஸ்லீம்களுக்கு உதவி புரிந்த அன்ஸார்கள், நாடோடி அராபியர்கள், வென்றடக்கப்பட்ட நாட்டு மக்கள் - என்று நான்கு குழுக்கள் இருக்கின்றன. அவர்கள் குரானுக்குச் சொன்ன விளக்கங்கள் வேறு வேறு தான்.

முகம்மது நபி மறைந்த முப்பதே ஆண்டுகளுக்குள் முஸ்லீம் மன்னர்கள் உள்நாட்டுப் போரில் இறங்கினார்களே, கலிஃபாக்கள் சாராயத் தொட்டியில் மிதந்தார்களே! இஸ்லாமிய சட்டங்களைச் செல்லாததாக்கியவர்கள் யார்? தஸ்லிமா போன்றோரா? இஸ்லாமிய மன்னர்களா?

எங்கே இருக்கிறது 'தூய இஸ்லாமிய நெறி'? காஷ்மீர் முஸ்லீம்கள் சூஃபி வழிபாட்டைப் பின்பற்றுகிறார்கள். ஹிஸ்புல் முஜாகிதான் குழு பர்தா போடாத காஷ்மீரி பெண்களை பர்தா போடச் சொல்லி மிரட்டுகிறது. முஸ்லீம்கள் நாகூர் தர்காவுக்குப் போவதுகூட இஸ்லாமிய சட்டத்துக்குப் புறம்பானதுதான்.

முகம்மது நபி மறைந்த முப்பதே ஆண்டுகளுக்குள் முஸ்லீம் மன்னர்கள் உள்நாட்டுப் போரில் இறங்கினார்களே, கலிஃபாக்கள் சாராயத் தொட்டியில் மிதந்தார்களே! இஸ்லாமிய சட்டங்களைச் செல்லாததாக்கியவர்கள் யார்? தஸ்லிமா போன்றோரா? இஸ்லாமிய மன்னர்களா?

படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 12
• குரல்: 1-2
• ஜூன் - ஜூலை '94

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3
ஆண்டுச் சந்தா: ரூ.36

வெளிநாடுகள்
(விமான அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 8.5

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

வீ.சீனிவாசன்,
45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம்,
சென்னை-600 049.

# கடப்பாரையை விழுங்கிவிட்டு சுக்குக்கஷாயம் குடிப்பது

சினிமா, வானொளி மற்றும் பத்திரிக்கைகளில் கீழ்த் தரமான ஆபாசமும் கொடூரமான வன்முறையும் நிரம்பி வழிகின்றன; அதனால் சமூக சீரழிவுகளும், கிரிமினல் குற்றங்களும் பெருத்து விட்டன; இந்தப் போக்கை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று சமூகப் பொறுப்புள்ளவர்கள் பலரும் கோருகின்றனர். சமீபத்தில் புதுடில்லியில் கூடிய சினிமாத்துறையினர், சினிமா விமர்சகர்கள், பத்திரிக்கையாளர்கள் மற்றும் சினிமா தணிக்கை வாரிய உறுப்பினர்களின் மாநாட்டில் சினிமாக்காரர்கள் கடும் கண்டனத்துக்குள்ளானார்கள். செய்தி - ஒலிபரப்பு - சினிமாத்துறை மாநில மந்திரிகளின் சமீபத்திய மாநாட்டில் பேசிய பிரதம மந்திரி, ''ஒரு இளைய தலைமுறை முழுவதையும் சீரழிக்கும் சினிமாத்துறை தானாகவே திருந்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்'' என்று எச்சரித்துள்ளார். மக்கள் பெருந்திரள் தொடர்பு சாதன வழிகாட்டும் குழு தயாரித்துள்ள ''திரையில் ஆபாசமும் வன்முறையும்: மக்கள் கண்ணோட்டம்'' என்கிற ஆய்வறிக்கை அவற்றினால் மிகப் பெரும் சமூகக் கேடுகள் விளைவதாகக் கூறுகிறது.

இந்தப் போக்கைத் தடுப்பதற்காக திரைப்பட தணிக்கை விதிகளைக் கடுமையாக்கவும், தணிக்கை முறையை வானொளிக்கும் விரிவுபடுத்தவும் சட்டத்திருத்தம் கொண்டு வருவது என்று அரசு முடிவு செய்துள்ளது. உண்மையில் அரசின் இந்த முயற்சி ''கடப்பாரையை விழுங்கிவிட்டு சுக்குக் கஷாயம்'' குடிப்பது போன்றது தான். பொருளாதாரத் தாராளமயமாக்கல் அந்நிய மூலதனத்தையும் தொழில் நுட்பத்தையும் கொண்டு வந்து குவிக்கும்; தொழிற்சாலைகள், வேலைவாய்ப்புகள், ஏற்றுமதி பெருகும் என்கிற மாயை உருவாக்கப்பட்டது. ஏகாதிபத்திய தேசங்கடந்த மற்றும் பன்னாட்டுத் தொழில் கழகங்களின் ஆடம்பர ஐந்து நட்சத்திர நுகர்வுக் கலாச்சாரத்துக்கும் அதன் சேவைத்துறையின் ஒரு பகுதியாக மேலை நாடுகளின் ஆபாசக் களி வெறியாட்டக் கலாச்சாரத்துக்கும் அகலக் கதவு திறந்து விடப்பட்டது. பெப்சி, கோகோ-கோலா குளிர்பானங்கள், டப்பா உணவுகள், பிர்ரி கார்டின் வடிவமைத்த உடைகள் முதல் பிரெஞ்சு நறுமண ''செண்ட்டுகள்'', கருத்தடை சாதனங்கள் வரை நுகர்வுப் பொருட்களுக்கான சந்தை விளம்பரக் காட்சிகள்; குலுக்கல் நடன இசை, நீலத் திரைப்படங்கள் ஆகிய அனைத்திலும் கீழ்த்தரமான ஆபாசம், சிறுவர்களுக்கான கேலிச் சித்திரக் கதைகளில் கூட கொடூரமான வன்முறைக் காட்சிகள் நிறைந்த மேலை நாட்டு பெருந்திரள் தொடர்பு சாதனங்களுக்கு எவ்விதத் தடையும் கிடையாது. இந்நிலையில் இந்தியத் திரையில் ஆபாசம் மற்றும் வன்முறையையும் அவற்றின் சமூக விளைவுகளையும் தடுக்கப் போவதாக இந்திய அரசு கூறுகிறது. ஆனால் இந்த முயற்சியில் அது ஒரு போதும் வெற்றியடையாது.

இந்தியத் திரை நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் எந்தவொரு காரணத்தாலும் தமது சமூக விரோதச் செயல்களை நியாயப்படுத்தும் உரிமை கோரமுடியாது. என்றாலும் அவர்கள் கூறும் ஒரே ஒரு காரணம் சமூகப் பொறுப்புடையவர்கள் அனைவரும் அக்கறை செலுத்த வேண்டியதாக உள்ளது. சன் டி.வி, ஜெயின் டி.வி, ஆசியா நெட் முதலிய இந்திய நிறுவனங்கள், ஸ்டார் டி.வி, எம்.டி.வி, பி.பி.சி போன்ற அந்நிய நிறுவனங்கள் நடத்தும் செயற்கைக்கோள் வானொளி நிகழ்ச்சிகள், கம்பி வழி (கேபிள்), ஒலி-ஒளி பதிப்பான்கள் பெரு நகரங்கள் முதல் குக்கிராமங்கள் வரை பெருகி வருகின்றன. தணிக்கை, தடை செய்யப்படாத அந்நிகழ்ச்சிகளோடு இந்தியத் திரை நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் போட்டி போட வேண்டியுள்ளது. மிகையாக இருந்தாலும் தங்களது நிகழ்ச்சிகளில் உள்ள ஆபாசமும் வன்முறையும் அந்நிய நிகழ்ச்சிகள் அளவுக்கு இல்லை என்பது அவர்களது வாதம். அதாவது சமூக விரோதச் செயல்கள்தாம் என்றாலும் அவற்றில் ''தேசியத் தொழிலு''க்கு தடை போடதீர்கள், தக்க பாதுகாப்பும் ஆதரவும் தாருங்கள் என்று கோருகிறார்கள். அவர்களின் அயோக்கியத்தனத்துக்குத் துணைபோக முடியாது; அதே சமயம், பெருகிவரும் அந்நியப் பண்பாட்டுப் படையெடுப்பை முறியடித்தே தீரவேண்டும்.

அது பொதுவில் ஆபாசம், வன்முறையைப் பரவச் செய்வது மட்டுமல்ல. வீடுகள்-விடுதிகள், பொதுவிடங்கள் எங்கெங்கும் உற்றார்-உறவினர், நண்பர்கள்-சகமனிதர்கள் என்று பாராது அனைவரின் சமூக-மனித உறவுகளையும் துண்டித்து, வானொளியின் ஒளிக்குழாய் முன்பு ஆணி அடித்தாற் போன்று கட்டுண்ட அடிமைகளாய் மாற்றி விடுகிறது. நவீன தகவல் தொடர்பு தொழில் நுட்பங்களைத் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொண்டு நமது பல நூற்றாண்டுகால பழக்க வழக்கங்களை சிதைத்து அழித்து விடுகிறது. நமது தேசிய இன-மொழி உணர்வுகளை நசுக்கி, நமது பண்பாடு-நாகரீகத்தை சின்னா பின்னப்படுத்துகிறது. நமது குடும்பம், மரபு, மதிப்பீடு, ஒழுக்கக் கோட்பாடுகளை தாக்கி நிலைகுலையச் செய்கிறது. மொத்தத்தில் உலகமெங்கும் தனது நுகர்பொருள் சந்தைக்கான ஒரே மாதிரியான பண்பாட்டு அடிமைகளாக-ஆட்டுமந்தைகளாக மனிதர்களை மாற்றுகிறது. இது வெறுமனே பொருளாதார நலன் கருதிச் செய்யும் பண்பாட்டுப் படையெடுப்பும் ஆக்கிரமிப்பும் மட்டுமல்ல. மேல்நிலை வல்லரசுகளின் உலகுதழுவிய மேலாதிக்கத்தின் ஒரு பகுதி. பின்தங்கிய நாடுகளின் ஆட்சி உரிமையைக் காலில் போட்டு மிதிப்பது. மக்கள் பெருந்திரள் தகவல்-தொடர்புத் தொழில் துறையில் ஆதிக்கம் வகிக்கும் உலகப் பேரரசன் என்றழைக்கப்படும் மொர்டோக்ஷ் போன்றவர்களை வரவேற்று, விருந்தளித்து பேரங்கள் நடத்தும் இந்திய ஆட்சியாளர்கள் இந்த மேலாதிக்கத்தை எதிர்ப்பவர்கள் அல்ல; மாறாக அதற்குத் துணை போகும் துரோகிகள்.

படிப்பகம்

www.padippakam.com

## தாழ்த்தப்பட்டோர் மீது தாக்குதல்:
# தப்படிக்க மறுத்த கட்டைவிரல் வெட்டு!

இந்திரப் பிரஸ்தத்தின்
காடுகள் எங்கே

குருங்குளத்தின்
முந்திரிக் காடுகள் எங்கே

எத்தனை காதம்
எத்தனை காலம்

அது
வில்லெடுக்கத் துணிந்ததால்
துண்டிக்கப்பட்ட பெருவிரல்

இது
பறையெடுக்க மறுத்ததால்
அறுக்கப்பட்ட பெருவிரல்

பெருவிரல்களில் மரணத்தில்
பாரதத்தின் உயிர்ப்பு.

சாவுக்குச் சேதி சொல்வது, தப்படிப்பது சவ அடக்கம் செய்வது போன்ற அடிமைத் தொழில்கள் எதையும் செய்ய முடியாது என்று மறுத்ததன் விளைவாக, குருங்குளம் கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் தாக்கப்பட்டிருக்கின்றனர். இப் போராட்டத்தை முன் நின்று நடத்திய தோழர் குருமூர்த்தியின் கட்டை விரல்களிரண்டையும் வெட்டியிருக்கின்றனர் உயர் சாதி (கள்ளர்) வெறியர்கள். தஞ்சைக்கு சுமார் 20-கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குருங்குளம் என்னும் கிராமத்தில் தொடர்ந்து வரும் சாதி அடக்கு முறைகளுக்கெதிராக, மக்கள் கலை இலக்கியக் கழகம் போராடி வருகிறது. சம்பவம் குறித்த அறிக்கை கீழ்வருமாறு:

ஏப்ரல் 14 தமிழ்ப் புத்தாண்டு நாள் ஆண்டு தோறும் நடைபெறும் குருங்குளம் மாரியம்மன் கோயில் திருவிழா. இந்த ஆண்டும் ''வழக்கமான உற்சாகத்துடன்'' துவங்கியது. மிகவும் குதூகலமாக, ஆனால் சாதி ஒழுங்கு குலையாமல் பால்குட ஊர்வலம் கோயிலை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

சாமியாடும் வேகத்தில் ஊர்வலத்திலிருந்த தாழ்த்தப்பட்டவர் ஒருவர் உயர் சாதியினரின் மத்தியில் கலந்துவிடவே அங்கேயே தகராறு துவங்கியது; ''ஏன்டா, அப்படியே ஒன்னா கலந்து பரப்பயலெல்லாம் கோயிலுக்குள்ள நுழைஞ்சிடலாம்னு பாக்குறீங்களா'' என்று சொல்லி சாதி வெறியர்கள் அவரைத் தாக்கத் தொடங்கியிருக்கின்றனர். இந்த கைகலப்புடனேயே ஊர்வலம் கோயில் வாசலைச் சென்றடைந்து விட்டது.

தமிழகத்தின் பல கிராமங்களையும் போலவே குருங்குளத்திலும் தாழ்த்தப்பட்ட மக்கள் கோயிலுக்குள் நுழைய முடியாது. பால் குட ஊர்வலம் கோயிலையடைந்தவுடன் உயர்சாதியினர் மட்டும் குடத்துடன் கோயிலுக்குள்ளே செல்வார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்கு வெளியே நின்றபடியே தங்கள் பால் குடங்களை மட்டும் கொடுத்து விட வேண்டும். பாலை எடுத்துக் கொணடு குடத்தைத் திருப்பித் தருவார்கள்; வாங்கிக் கொண்டு இடத்தைக் காலி செய்து விட வேண்டும். பல ஆண்டுகளாக, நடந்து வரும் இந்த அநீதி 'முறைப்படி' இவ்வாண்டிலும் தொடர்ந்தது.

''கோயிலுக்குள் நின்று கொண்டு பால்குடத்தை வாங்கிக் கொள்கிறார்களே, பாலை என்ன செய்கிறார்கள்'' என்ற ஆவல் மேலிட ராஜு என்ற இளைஞர் தலையை மட்டும் கோயில் வாசலுக்குள் நீட்டி எட்டிப் பார்த்திருக்கிறார், நாம் கொண்டு வந்த பாலையும் அம்மன் தலையில் ஊற்றுவார்கள் என்று எதிர்பார்த்திருந்தவருக்கு அதிர்ச்சி கோயிலுக்குள் இருந்த ஒரு தொட்டியில் பாலைக் கவிழ்த்துக் கொண்டிருந்தனர்.



குருமூர்த்தி

''சாமிக்குக் கொண்டுவந்த பாலை இப்படி செய்கிறீர்களே இது அடுக்குமா?'' என்று அவர் கேட்டது தான் தாமதம்; பளாரென்று விழுந்தது ஒரு அறை. கோயில் வாசலில் நின்றிருந்த தாழ்த்தப்பட்டவர்கள் அனைவரும் தாக்கப்பட்டனர், 11 பேர் காயமடைந்தனர்.

தாக்கப்பட்ட மக்கள் உடனே வல்லம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர். 'ராஜு' குடி போதையில் கோயில் வாசலில் கலாட்டா செய்ததாக, உயர் சாதி வெறியர்களும் பொய்ப் புகார் கொடுத்தனர்.

அன்று மாலை நடைபெறவிருந்த சாமி ஊர்வலத்திற்கு தப்படிக்கவோ சாமி கும்பிடவோ, போகக் கூடாது என்று முடிவு செய்தனர் தாழ்த்தப்பட்ட மக்கள். இதை எதிர்பார்த்த மேல் சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்டவர்களை சமாதானப்படுத்தி தப்படிக்க வரச் செய்வதற்காக போலீசையே தூது அனுப்பினர். புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத போலீசு மேல் சாதியினரின் தூதனாக 'மொட்டை சமரசம்' பேசினர். தப்படிக்க அழைத்தனர். தாழ்த்தப்பட்ட மக்கள் உறுதியாக மறுக்கவே மூக்குடைபட்டு ஆத்திரத்துடன் திரும்பினார்கள் போலீசு தூதர்கள். திருவிழாவன்று மாலை ஊர் முழுவதும் ஊர்வலமாக வரும் 'சாமி' எப்போதுமே தாழ்த்தப்பட்டோரின் தெருவுக்குள் வருவதில்லை. தெருமுனையில் இருக்கும் மரத்தடியில் சாமி நிற்கும்; சேரி சனம் எல்லாம் அங்கே போய்த் தேங்காய் உடைத்து கும்பிட்டுக் கொள்வதுதான் மரபு. இந்த முறை சாமியைக் கும்பிட அங்கே மரம் மட்டும்தான் இருந்தது. மக்கள் இல்லை; சாமிக்கு வாங்கி வைத்த தேங்காய் பழத்தையெல்லாம் குழந்தைகள் குதூகலமாகத் தின்று தீர்த்தனர். சுயமரியாதை உணர்வு என்னும் தீயில் பக்தி அவிந்தது; சாதிவெறியர்களின் மீசை மயிரும் கருகியது.

மறுநாள் காலை பேருந்துக்குக் காத்திருந்த காமராஜ், முருகேசன், குணசேகரன் ஆகியோரை சாதியைச் சொல்லி ஏசி வம்புக்கிழுத்தனர் நான்கு மேல் சாதி (கள்ளர்) வெறியர்கள். அவர்கள் மீது தீண்டாமைக் குற்றத்திற்காக மீண்டும் வல்லம் காவல் நிலையத்தில் புகார் மனு தரப்பட்டது.

பிறகு அதை விசாரிக்க வந்த காவல் துறையினர் திட்டியவர்களின் வீடுகளை காட்டச் சொல்லியிருக்கின்றனர். குருமூர்த்தி அவர்களது வீடுகளை அடையாளம் காட்டியிருக்கிறார். ஆனால் அதற்குப் பின் அந்த வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லை; யாரும் கைது செய்யப்படவும் இல்லை. தைரியமாக அடையாளம் காட்ட வந்த குருமூர்த்தியை ''இவன் தான் - கவனித்துக் கொள்ளுங்கள்''

படிப்பகம்

www.padippakam.com

என்று சாதி வெறியர்களுக்கு மறைமுக மாக ஆள்காட்டி விடுவதற்குத்தான் போலீசு இந்த நாடகத்தை நடத்தியது போலும்!

புத்தாண்டுக்குப் பிறகு வந்தது நல்லேர் கட்டும் நிகழ்ச்சி. ஏர் கலப்பையைக் கழுவி சுத்தம் செய்து, மாரியம்மன் கோயில் முன்னால் வைத்து தப்படித்து சாமி கும்பிட்ட பின், மேல் சாதி ஆண்டைகளின் நிலத்தில் சிறிது நேரம் ஏரோட்ட வேண்டும். இது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் கடமை. தமக்கு சொந்த நிலமிருந்தாலும் அவர்கள் ஆண்டை வீட்டு நிலத்தில்தான் முதலில் நல்லேர் கட்ட வேண்டும்.

இந்த முறை நல்லேர் பூட்டும் நாள் வந்தது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் தத்தம் நிலத்தில் நல்லேர் பூட்டி உழுது கொண்டார்கள்; ஆண்டைக்கு ஏர் பூட்டவும் இல்லை; தப்படிக்கவும் இல்லை. இது சாதி வெறியர்களின் தலையில் இறங்கிய இரண்டாவது அடி.

அடுத்து முத்தரையர் சமூகத்தினரின் தெருவில் இரண்டு சாவுகள் நேர்ந்தன. கொட்டு அடிக்கவும், பிணம் எரிக்கவும் தாழ்த்தப்பட்டவர்கள் போகவில்லை. ஆனால் இது நாள் வரை முத்தரையர் தெரு சாவைக் கண்டு கொள்ளாத கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த சாதி வெறியர்கள் திடீர்க்கரிசனத்துடன் சாவு வேலைகளைக் கூடமாட நின்று கவனித்தார்கள்.

வரிசையாக நடைபெற்ற ஒவ்வொரு சம்பவத்தின் போதும் தாழ்த்தப்பட்டவர்கள் தலைவணங்கி விடுவார்கள் என்றும், பழைய நிலைமை திரும்பி விடும் என்றும் எதிர்பார்த்த சாதி வெறியர்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது. ஆத்திரம் தலை தூக்கியது. 'பரப்பயல்களுக்குக் குளிர்விட்டுப் போகக்' காரணமாயிருக்கும் முன்னணியாளர்களைத் தாக்குவதற்கு வேறு முகாந்திரத்தை உருவாக்கத் திட்டமிட்டார்கள்.

குருங்குளம் வட்டாரத்தில் முந்திரிக் காடுகள் அதிகம். முந்திரிப்பழம் உலுக்கிச் சேகரித்த பின்னால், தவறிப் போய் சருகுகளின் கீழே அங்கொன்றும் இங்கொன்றுமாய் மறைந்து கிடக்கும் தப்பு (தப்பிய) கொட்டைகளை யார் வேண்டுமானாலும் யாருடைய கொல்லையில் வேண்டுமானாலும் பொறுக்கிக் கொள்வார்கள். பெரும்பாலும் ஏழை விவசாயிகள், குறிப்பாக சிறுவர்களும் பெண்களும் தான் இதில் ஈடுபடுவார்கள்.

5-6-94 அன்று காலை குருமூர்த்தியும் அவருடைய மனைவியும் தம் சொந்தத் தோப்பிலும் குருமூர்த்தியின் அண்ணன் வரதராசு அவரது மனைவி மற்றும் பல சிறுவர்களும் பெண்களுமாக ஏறத்தாழ 40 பேர் ஆங்காங்கே தப்புக் கொட்டை பொறுக்கிக் கொண்டிருந்தனர்.

> "அறுத்துக் கொண்டிருப்பது இடது கைப்பெருவிரல் என்பதை அப்போதுதான் கவனித்த ஒரு மிருகம் "டேய்... வலது கை விரலை வெட்டுங்கடா" என்று கத்தியது. ஒரே வெட்டில் குருமூர்த்தியின் வலது கைப்பெருவிரல் துண்டாகித் துடித்து விழுந்தது".

குருமூர்த்தியோ அவரது மனைவியோ தம் தோப்பை விட்டு அடுத்தவர் தோப்பிற்குள் நுழைவார்கள் என்றும், திருட்டுப் பட்டம் கட்டி தண்டிக்கலாம் என்றும், கள்ளர் சமூகத்தைச் சார்ந்த அடியாட்கள் சற்றுத் தொலைவில் தயாராக நின்றிருந்தனர். குருமூர்த்தியை அடையாளம் காட்டுவதற்காக வந்திருந்த ஒரேயொரு ஆள்காட்டியைத் தவிர அந்த கும்பலில் இருந்த மற்றவர்களெல்லாம் பக்கத்து ஊரான மருங்குளத்து ஆட்கள். நீண்ட நேரமாகக் காத்திருந்தும் குருமூர்த்தி தன் கொல்லையை விட்டு வராததால் எரிச்சலடைந்து - அவரது அண்ணனையும், அண்ணியையும் மற்றவர்கள் சிலரையும் தாறுமாறாக தாக்கத் தொடங்கியது அக்கும்பல். தொலைவிலிருந்து இதைக் கண்ட குருமூர்த்தி தடுத்து நிறுத்துவதற்காக ஓடி வந்தார்.

இந்த சந்தர்ப்பத்திற்காகவே காத்திருந்த அந்தச் சாதி வெறியர்கள் உடனே மற்றவர்களை விட்டுவிட்டு குருமூர்த்தியை அடித்து நொறுக்கி கைகளை பின்புறமாகக் கட்டி சைக்கிளில் உட்கார வைத்துக் கொண்டு போக முயன்றனர். எதிர்பாராத இந்தத் தாக்குதலில் அடிபட்டுச் சிலர் கீழே விழுந்து கிடக்க, மற்றவர்கள், "குருமூர்த்தியை எதற்குக் கட்டுகிறீர்கள், எங்கே கொண்டு போகிறீர்கள்?" என்று மறித்திருக்கின்றனர். சிலர் அவரை விட்டுவிடுமாறு கதறியிருக்கின்றனர்.

ஆத்திரமாகப் பதில் சொன்னால், எங்கே தமது சதித்திட்டம் நிறைவேறாமல் போய்விடுமோ என்று யோசித்து "அவரை போலீசு நிலையத்துக்குத் தான் கொண்டு போகிறோம்" என்று மிகவும் நைச்சியமாகப் பதில் சொல்லியிருக்கிறது அந்தக் கும்பல். அந்தப் பொய்யை அப்பாவித்தனமாக நம்பி, "சரி ஸ்டேசனுக்குப் போய் பார்த்துக்குவோம்" என்று புறப்பட்டார்கள் மற்றவர்கள். குருமூர்த்தியின் மனைவி மட்டும் தன்னந்தனியாக அந்தச் சதிகாரர்களின் சைக்கிள்களைப் பின் தொடர்ந்து முடிந்தவரை ஓடியிருக்கிறார் பயனில்லை.

சாதி வெறியர்கள் குருமூர்த்தியை மருங்குளம் நால்ரோடுக்குக் கொண்டு சென்று விட்டனர். அவரை அங்கேயே வைத்துக் கொண்டு மேற்கொண்டு என்ன செய்வதென்று கேட்க குருங்குளத்திற்கு ஆளனுப்பினர். கட்டை விரலை வெட்டச் சொல்லி குருங்குளத்திலிருந்து உத்தரவு வந்தது. கைகளிரண்டும் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையிலேயே ஒரு கட்டை விரலை அறுக்கத் தொடங்கினர். பாதிவிரல் அறுந்து ரத்தம் பெருகத் தொடங்கியது.

அறுத்துக் கொண்டிருப்பது இடது கைப் பெருவிரல் என்பதை அப்போது தான் கவனித்த ஒரு மிருகம் "டேய் வலது கை விரலை வெட்டுங்கடா" என்று கத்தியவுடன் ஒரே வெட்டில் குருமூர்த்தியின் வலதுகைக் கட்டைவிரல் துண்டாகித் துடித்து விழுந்தது. தங்களது 'வீரத்தின்' நினைவுச் சின்னமாக அந்த விரலை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டு 'ஓடுடா... பர நாயே' என்று குருமூர்த்தியை எட்டி உதைத்தனர் அந்தக் கோழைகள்.

இரத்தம் சொட்டச் சொட்ட மயங்கி விழுந்து... எழுந்து... தவழ்ந்து... தடுமாறி ஊர் எல்லையை அடைந்து மயங்கிச் சரிந்தார் குருமூர்த்தி.

பிறகு... மருத்துவமனை; மீண்டும் வல்லம் போலீசில் புகார். ஆனால் சாதி வெறியர்கள் யாரும் இந்த நிமிடம் வரை கைது செய்யப்படவில்லை. தாழ்த்தப்பட்டவர்கள் தோப்பில் புகுந்து திருடியதாகவும், கேட்டதற்குத் தங்களைத் தாக்கியதாகவும்' அவர்கள் கொடுத்த எதிர்ப்பு காரை வாங்கிக் கொண்டு வழக்கும் பதிவு செய்துள்ளது போலீசு.

வல்லம் காவல்துறை ஆய்வாளர் கணேசமூர்த்தி சாதிவெறியர்களின் விசுவாசமான கையாளாகச் செயல்படுகிறார். தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களின் தரப்பிலிருந்து கொடுக்கப்பட்ட எந்தப் புகார் மீதும் காவல் துறை நடவடிக்கை எதுவுமே எடுக்காததைச் சொல்லி "கணேச மூர்த்தி இருக்கும் வரை எங்களை யாரும் அசைக்க முடியாது" என்று பகிரங்கமாக மார்தட்டுகிறார்கள் சாதிவெறியர்கள்.

"அடிமைத் தொழிலெல்லாம் எப்பவோ ஒழிச்சாச்சே! நீங்க ஏன்யா அடிமைத் தொழில் செய்யிறீங்க? உங்களதான் முதல்ல பிடிச்சு உள்ளே வக்கணும்" என்று மனு கொடுக்க வந்த தாழ்த்தப்பட்ட மக்களிடம் நக்கலாகப் பேசிவிட்டு, மேல் நடவடிக்கைக்கு 'சிபாரிசு' செய்கிறார் - தஞ்சை மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அதிகாரி.



படிப்பகம்

www.padippakam.com

## ம.க.இ.க. என்ற பெயரில் அராஜகம் பாரீர்

1. கோவில் திருவிழாவில் புகுந்து அமைதியை கெடுத்து வன்முறையை தூண்டுவது.

2. தோப்பு, காடுகளில் புகுந்து திருடுவது. தடுத்தவர்களை வெட்ட முயற்சிப்பது.
3. அமைதிப் பூங்காவாகிய எங்கள் கிராமத்தை நிலை குலைய செய்து ஊரை இரண்டாக்குவது.

4 படித்த இளைஞர்களை வன்முறைப் பாதையில் செல்ல வழி காட்டுவது, மீறினால் மிரட்டுவது.

5 பாரத ஸ்டேட் வங்கியில் வேலை பார்க்கும் A. தனசிங்கு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் வேலை பார்க்கும் M. மாணிக்கம் ஆகியோரின் ஆடம்பரச் செலவுகளுக்கு அப்பாவி மக்களை தூண்டி வரண்டச் செய்து. அதைக் கொண்டு வாழ்க்கை நடத்துவது. இச்செயல்களை தூண்டும் A. தனசிங்கு, M. மாணிக்கம், இவர்களின் செயல்களை தடுத்து காவல்துறையும், தமிழக அரசும் அமைதி காத்திடுக.

இப்படிக்கு,

**கிராம வாசிகள்.**

குருங்குளம்.

குருங்குளம் சாதிவெறியர்கள் வெளியிட்டுள்ள பிரசுரம்

''கட்டை விரலை வெட்டிட்டாங்களா, நாங்க சுண்டு விரலை வெட்டிடுறோம்'' என்று புகார் கொடுக்க வந்தவர்களை ஏகத்தாளம் செய்கிறார் மனுவை வாங்கிப் பார்த்த வல்லம் போலீஸ் நிலைய காவலர். அரசு மற்றும் காவல் துறை உயரதிகாரிகள் அனைவரும் சாதி வெறியர்கள் கொடுத்திருக்கும் புகார்தான் உண்மையானது என்ற தோரணையிலேயே பேசுகின்றனர்.

15.6.94 அன்று மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் தலைமையில் தஞ்சையில் நடத்தப்பட்ட கண்டன ஊர்வலத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திலும் சுமார் 350 பேர் கலந்து கொண்டனர்.

அதுவரை எதையுமே கண்டு கொள்ளாமல் மவுனம் சாதித்து வந்த அரசு உடனே விழித்துக் கொண்டது; ஒரே யொரு நபர்மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டது; ஆர்.டி.ஓ தலைமையில் ஒரு கண்துடைப்பு விசாரணை நடந்தது. இரு தரப்பினரையும் கூப்பிட்டுக் கட்டைப் பஞ்சாயத்து பேசிய ஆர்.டி.ஓ, குருமூர்த்தியின் விரலை வெட்டியது பற்றி தாழ்த்தப்பட்ட மக்கள் தரப்பிலிருந்து எழுப்பிய கேள்விக்கு பதிலே சொல்லாமல் விசாரணைக் கருமாதியை அவசரமாக முடித்துக் கொண்டார்.

''எதுவாயிருந்தாலும் உங்க சாதிச் சங்கம் மூலமா வாங்க, இல்லைன்னா அம்பேத்கார் சங்கம் மூலமா வாங்க - பேசித் தீர்த்துக்கலாம். ம.க.இ.க., பின்னால போயி நடவடிக்கை அதுஇதுன்னு எறங்கினா அப்புறம் பிரச்சினைதான்'' என்று பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களை சாதிவெறியுடன் மிரட்டியிருக்கிறார் குருங்குளம் வட்டாரத்தின் தொகுதி (திருவோணம் தொகுதி) அ.தி.மு.க, எம்.எல்.ஏ. தங்கமுத்து. இவரும் கள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

குருங்குளம் ஜனநாயக வாலிபர் சங்கத்தின் (மார்க்சிஸ்டு கட்சியின் DYFI) இளைஞர்கள், தஞ்சையிலுள்ள அவர்களது தலைமையை அணுகி இப்பிரச்சினையில் தலையிடக் கோரியிருக்கின்றனர். ''இதிலெல்லாம் தலையிட்டால் பிறகு அது சாதிப் பிரச்சினையாக மாறி விடும்'' என்று சொல்லி அயோக்கியத்தனமாக ஒதுங்கிக் கொண்டது 'மார்க்சிஸ்டு' தலைமை. ஆத்திரமடைந்த DYFI இளைஞர்கள் 15.6.94 அன்று ம.க.இ.க நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

17.6.94 அன்று குருங்குளத்திலிருந்த மார்க்சிஸ்டு கட்சியின் கொடி மரத்தையும் சாதி வெறியர்கள் பிடுங்கி எறிந்தனர். போலீசில் ஒரு புகாரை எழுதிக் கொடுத்துவிட்டு சொரணையில்லாமல் மவுனம் சாதிக்கிறது மார்க்சிஸ்டு கட்சித் தலைமை. ஒரு வேளை இதில் தலையிட்டு நடவடிக்கையில் இறங்கினால் அது 'வர்க்கப் பிரச்சினையாகி விடும்' என்ற அச்சமோ என்னவோ!

கடைசியாக 18.6.94 அன்று ஊர்க் கூட்டம் போட்டு ''தாழ்த்தப்பட்டவர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது; கடைகளில் அவர்களுக்கு பொருட்கள் விற்கக் கூடாது'' என்றெல்லாம் பல கட்டுப்பாடுகளை சாதிவெறியர்கள் அறிவித்தனர். ஆனால் அவை ஒன்றைக் கூட செயல்படுத்த முடியாமல் பின் வாங்கி விட்டனர். அதே கிராமத்தில் உள்ள முத்தரையர், வேளாளர் மற்றும் பள்ளர் சமூகத்தினர் மத்தியிலும், ஏன், கள்ளர் சமூகத்திலேயே கணிசமான பேர்களிடம் சாதிவெறியர்களின் ஆர்ப்பாட்டங்கள் செல்லுபடியாகவில்லை என்பதையே இது காட்டுகிறது. ஆனால் சாதிவெறியை விசிறிவிடும் முயற்சியை அவர்கள் நிறுத்திவிடவில்லை.

ஊர்க்கூட்டம் நடத்தி தீண்டாமையையும், சமூகப் புறக்கணிப்பையும் அறிவித்து அமல்படுத்தச் சொல்லும் சாதிவெறியர்களை சுதந்திரமாக உலவவிட்டிருக்கும் போலீசு, ம.க.இ.க., வின் பொதுக் கூட்டத்திற்கு மட்டும் அனுமதி மறுத்திருக்கிறது.

''இனக்கலவரம் பரவும் அபாயம் நிலவுவதால் பொதுக்கூட்டத்திற்கு அனுமதி தரமுடியாது'' என்று கூறி 20.6.94 அன்று குருங்குளத்தில் ம.க.இ.க., நடத்த விருந்த பொதுக்கூட்டத்திற்கு காவல் துறை இறுதி நேரத்தில் அனுமதி மறுத்திருக்கிறது.

இதே வல்லம் வட்டாரத்தில் உள்ள சென்னம்பட்டி என்னும் கிராமத்தில் மேல்சாதியினரின் தெருவில் தாழ்த்தப்பட்டவர்கள் செருப்பணிந்து நடக்கக்கூடாது; சைக்கிளில் ஏறிச் செல்லக் கூடாது என்று மேல்சாதி வெறியர்கள் சிலர் நடத்தி வந்த காட்டு தர்பாரை ம.க.இ.க., முறியடித்தது. அடுத்து வந்திருப்பது குருங்குளம்.

இந்த வட்டாரம் முழுதும் எங்கே தமது ஆதிக்கம் சரிந்து விடுமோ என்ற அச்சத்தில் ஆதிக்க சாதி வெறியர்கள் கொஞ்சம் ஆடிப் பார்க்கிறார்கள். 'வர்க்க ஒற்றுமை' பேசும் போலி மார்க்சிஸ்டுகள் தாங்கள் யார் பக்கம் என்பதைத் தம் நடவடிக்கையின் மூலம் தெளிவுபடுத்தி விட்டார்கள். தமிழின ஒற்றுமை குறித்துப் பேசுவோர் அனைவரும் தாங்கள் யார் பக்கம் என்பதை நடைமுறையில் நிரூபிக்க வேண்டும். மொட்டை சமாதானத்திற்கும், கட்டைப் பஞ்சாயத்திற்கும் இதில் இடமில்லை.

தோழர் குருமூர்த்தியின் கட்டை விரலை பனிக்கட்டியில் போட்டு கண்ணாடிக் குடுவையில் பார்வைக்கு வைத்திருக்கிறார்களாம் அந்தச் சாதி வெறியர்கள்.

மகிழ்ச்சி. வெட்டப்பட்ட அந்தக் கட்டை விரல் பாதுகாப்பாக இருக்கட்டும். வெட்டிய கட்டை விரலும் அதனருகில் காட்சிக்கு வைக்கப்படும்போதுதான் வரலாறு முழுமையடையும்.

● அஜித்

படிப்பகம்

www.padippakam.com

# விபச்சாரத்தின் விளம்பரதாரர்கள்

"என்னுடைய பேண்ட் கூட செக்ஸியானது" என்று தொடங்கும் இந்திப்படப் பாடலை அனுமதிக்க முடியாது என்று முதலில் மறுத்தது திரைப்படத் தணிக்கைக் குழு. "செக்ஸி" என்ற வார்த்தையை முற்போக்கான பொருளில்தான் பயன்படுத்தியிருக்கிறோம்; ஆபாசமான பொருளில் அல்ல" - என்று அந்தப் படத்தின் தயாரிப்பாளர் கூறிய விளக்கத்தைக் கேட்டபின் 'தெளிவடைந்த' தணிக்கைக் குழு பாடலை அனுமதித்துவிட்டது.

"சமஞ்சது எப்படி" என்ற பாடல் பற்றி தணிக்கைக் குழுவில் உள்ள தமிழ்ப் பெருமக்கள் ஒன்றும் அலட்டிக் கொள்ளவில்லை போலும். ஒருவேளை இப்பாடலைத் தடை செய்திருந்தால் "சமஞ்சது எப்படி 'என்று விஞ்ஞான ஆய்வுக் கண்ணோட்டத்தில்தான் கேட்டிருக்கிறோம்; ஆபாசமாக அல்ல" என்று விளக்கம் கூறியிருப்பார்கள். தணிக்கைக் குழுவும் ஏற்றுக் கொண்டிருக்கும்.

கதாநாயகிகளே காபரே ஆட்டக்காரிகளாக வருகிறார்கள். கனவுக் காட்சிகளில் கதாநாயகியை நாயகனுடன் சேர்ந்து ஒரு கூட்டமே காதல் செய்கிறது. சமஞ்சது எப்படி, ஆட்டோ ராணி, இடுப்பு அடிக்கடி துடிக்குது, மாங்கா மாங்கா, பந்தலிலே தொங்குகிற, கடலை கடலை அக்காமக வெடலை வெடலை... போன்ற பாடல்கள் பொறுக்கித் தனத்தின் எல்லையை அன்றாடம் விரிவுபடுத்துகின்றன.

இந்தக் கேவலமான போக்கை இந்தித் திரையுலகில் துவக்கி வைத்த "சோளி கே பீச்சே கியா ஹை" (ரவிக்கைக்குப் பின்னால் என்ன?) என்ற பாடலைப் பாடிய பாடகிக்கு 'சிறந்த பாடகி' விருதும் அதற்கு நடனம் அமைத்தவருக்கு "சிறந்த நடன ஆசிரியர்" விருதும் அளித்து கவுரவித்திருக்கிறது ஃபிலிம் ஃபேர் பத்திரிகை.

இந்த இழிநிலைக்கு யார் காரணம்?

"தொலைக்காட்சி, வீடியோ ஆகியவற்றின் வரவால் நடுத்தர வர்க்கமும், மேல்தட்டு வர்க்கமும் சினிமாக் கொட்டகைக்கு வருவதில்லை; முன் வரிசைப் பேர்வழிகள் (பெஞ்சு டிக்கெட்டுகள்) என்று சொல்லப்படுபவர்கள்தான் இன்று அரங்கம் முழுவதையும் ஆக்கிரமித்துள்ளார்கள்" என்று குற்றம் சாட்டுகிறார் கமல்ஹாசன்.

"பாலுறவை வெளிப்படையாகப் பார்க்க விரும்பும் ரசிகர்கள்தான் ஒரே படத்தை மீண்டும் மீண்டும் பார்க்கிறார்கள். இவர்களது கோரிக்கையை நிறைவு செய்யத்தான் தயாரிப்பாளர்கள் இவ்வாறு இறங்க வேண்டியுள்ளது" என்கிறார் 'இந்து' புகழ் பவித்ரன்.

"ஜனரஞ்சகமான (அதாவது மட்டரகமான) பாடல்கள் நான்கு எழுதி சம்பாதித்தால்தான் சின்ன சின்ன ஆசை போல் ஒரு இலக்கியத்தரமான பாடலை ஆன்ம திருப்தியுடன் எழுத முடிகிறது" என்று தன்னிலை விளக்கம் தருகிறார் வைரமுத்து.

'பணப்பையை அஜாக்கிரதையாக வைத்திருந்ததன் மூலம் என்னைத் திருட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளி விட்டான்' என்று பறிகொடுத்தவன் மேல் குற்றம் சாட்டும் ஜேப்படித் திருடனைப் போலப் பேசுகிறார்கள் இந்த யோக்கியர்கள்.

புடலங்காய், மாங்காய் போன்ற பாடல்களெல்லாம் பெஞ்சு டிக்கெட்டுகளான கீழ் மக்களின் பண்பாடாம். "பால்கனி வர்க்கத்தின் 'உயர்ந்த' கலை ரசனையும், படைப்பாற்றலும் உள்ள நாங்கள் வேறு வழியின்றி - காசுக்காக - முகச்சுளிப்புடன்தான் இந்த சாக்கடையில் இறங்குகிறோமேயொழிய நாங்களெல்லாம் ஒரிஜினல் இளங்கோ, ஷெல்லி பரம்பரை" என்று தமக்குத்தாமே அவசரமாக அக்மார்க் முத்திரை குத்திக் கொள்கிறார்கள். 'இரவில் வேசியாக இருந்தால்தான் பகலிலாவது பத்தினி வேசம் போட முடியும்' என்கிறார் வைரமுத்து.

"செக்ஸை அதிகமா விமரிசிப்பவர்களுக்கு இரண்டு எண்ணம். உள்ளே செம ஜொள்ளாக இருப்பாங்க. வெளியே ஆ... ஊன்னு கத்துவாங்க... இப்போ அய்யோ... ச்சீ... அசிங்கம் என்று பம்மாத்து காட்டுகிறோமே அந்த செக்ஸை 2000 ஆண்டுகளுக்கு முன்பே இலக்கியத்தில் சொல்லிட்டு போய்ட்டாங்க... இது இல்லாம... பாடலைக் கேட்டு காதைப் பொத்துகிறவர்களை உளவியல் பூர்வமாக சந்தேகிக்கிறேன். தாசிகள் இருந்த நாடு நம் நாடு. இங்க ஹீட் ஜாஸ்தி" என்று வரலாற்று விளக்கம் தருகிறார் பாலகுமாரன்.

இரண்டாயிரம் ஆண்டு பாரம்பரியமுள்ள இலக்கிய விரசத்திற்கு வாரிசுகள் யார்? தான் வழிபடும் பெண் தெய்வத்தின் ரகசிய உறுப்புகளை ஒரு காமுகனுக்கே உரிய சுவையுடன் வர்ணனை செய்யும் ஆதி சங்கரனும், ஞானப்பால் அருந்திய தாயின் மார்பை சாவித்துவாரக் கண் கொண்டு ரசிக்கும் ஞான சம்பந்தனும், இழவு வீட்டில் சேலை விலகிய பெண்ணின் அழகைப் பாடும் கம்பனும் முதல் பெஞ்சுக்காரனுக்கா மூதாதையர்கள்?

கஜுராகோ சிற்பங்களும், கோயில் கோபுரங்களின் மேல் நின்று அவிழ்த்துப் போட்டு ஆடும் சிற்பங்களும் யாருடைய கற்பனையில் உதித்தவை? அடுத்த வேளை சோற்றுக்கென்ன வழி என்று கவலையில் மூழ்கியிருந்த உழவனின் கற்பனையில் உதித்தவையா? அடுத்த இரவைப் பற்றிய கற்பனையில் மூழ்கியிருந்த தொந்திகளின் சிந்தனையில் உதித்தவையா?

பாலியல் உறவு வேறு பாலியல் வக்கிரம் வேறு. பாலியல் உறவை சாதாரண உழைப்பாளிகள் என்றைக்கும் புனிதமாக்கியதுமில்லை. பூடகமாக்கியதுமில்லை. அது இயல்பானதாக மட்டுமே இருந்தது. இழுத்துப் போர்த்திவிட்டதும், அய்யோ சீ என்றதும், பிறகு அவிழ்த்துப் போட வைத்ததும் ஆளும் வர்க்கங்களின் - அதாவது பால்கனி வர்க்கத்தின் இரட்டை வேடம்தான்.

ஹீட் (சூடு) அதிகமானதால் தாசிகள் தோன்றவில்லை; ஃபாட் (கொழுப்பு) ஆண்டைகளுக்கு அதிகமாகிப் போனதால் அவர்கள் உருவாக்கப்பட்டார்கள். பாலகுமாரனின் மூதாதையர்கள் நகர்வலம் வந்தபோது பெண்கள் வீட்டுக்குள் ஒளிந்து கொண்டார்கள்.

இந்த 'மேன்மக்களுடைய' ரசனையை சமுதாயம் முழுவதற்கும் பரப்பும் திருப்பணியைத்தான் தமிழ் சினிமா செய்து கொண்டிருக்கிறது. எனவே கமல்ஹாசனும், வாலியும், வைரமுத்துவும், பவித்ரனும் நாய் வேடம் தரிக்க நேர்ந்த மான்கள் அல்ல; அவ்வப்போது மான் வேடம் போட்டுத் துள்ளும் கார்த்திகை மாத நாய்கள்.

"நல்லது கெட்டது நாலும்தாம் இருக்கும் 'சமஞ்சது எப்படி' பாட்டால சமூகம் கெட்டுப்போயிடும்னு சொல்றது பைத்தியக்காரத்தனம்"
— வாலி



www.padippakam.com

பாடலைக் கேட்டுக் காதைப்
பொத்துகிறவர்களை நான் உளவியல்
பூர்வமாகவே சந்தேகிக்கிறேன்
தாசிகள் இருந்த நாடு நம் நாடு
இங்கே சூடு அதிகம்.
— பாலகுமாரன்



தனது இழிசெயலுக்காக வருந்தா விட்டாலும் பரவாயில்லை, யார் தனக்குக் கொடிகட்டி, கட்அவுட் வைத்து, ரசிகர் மன்றம் நடத்துகிறானோ அவனை தரம் தாழ்ந்தவன் என்றும் இழிபிறவி என்றும் நாக்கூசாமல் பேசுவதற்கு இவர்களுக்கு எவ்வளவு திமிர் இருக்க வேண்டும்? பொறுக்கி வர்க்கக் கலாச்சாரத்தை எண்ணி தலைமைப் பொறுக்கிகள் அங்கலாய்ப்பதா?

''என்னுடைய ரசனைக்கு ஏற்ப சுகமான சுமைகள் என்ற நல்ல படமொன்றை எடுத்தேன்; ரசிகர்கள் நிராகரித்துவிட்டார்கள். என்னுடைய மார்க்கெட்டைத் தக்கவைத்துக் கொள்ளவும், நட்டத்தை ஈடுகட்டவும் 'உள்ளே-வெளியே' (என்ற ஆபாசப்படம்) எடுக்க வேண்டியதாயிற்று'' என்று தன்னுடைய 'அவல' நிலையை சொல்கிறார் பார்த்திபன். இதற்காகவே காத்திருந்த கங்கை அமரனும், பவித்ரனும் உடனே ஆமோதிக்கின்றனர்.

''பால் வியாபாரம் செய்து நொடித்துப் போனால் கஞ்சா விற்கவாம்; சம்பளப் பணத்தில் குடும்பம் நடத்த முடியாதவன் லஞ்சம் வாங்கலாம்'' என்பதுதான் இவர்கள் கூறும் தத்துவம். 'பழம் நீயப்பா' என்று பாட்டெழுதுவதும் ''மாங்கா.. மாங்கா'' என்று எழுதுவதும் இவர்களுடைய உரிமை அல்லது வியாபார சுதந்திரம். இதில் தலையிடவோ கேள்வி கேட்கவோ யாருக்கும் உரிமை இல்லை என்பதே இவர்களது கோட்பாடு.

நெருக்கிப் பிடித்தால் ''இசைக்கு ஏற்ற அசைவு நான் என்ன செய்ய'' என்று பாடலாசிரியரைக் கையைக் காட்டுகிறார் டான்ஸ் மாஸ்டர். தயாரிப்பாளர் கேட்டபடி எழுதினேன் என்கிறார் பாடலாசிரியர்; இயக்குனர் சொன்னபடி ஆடினேன் என்கின்றனர் நடிகர், நடிகைகள். பிடிபட்ட கொள்ளைக் கும்பலைப் போல தனித்தனியே எல்லோரும் நழுவப் பார்க்கின்றனர்.

''இந்த 'சமஞ்சது எப்படி' பாட்டால சமூகம் கெட்டுப் போயிடும்னு சொல்றது பைத்தியக்காரத்தனம்'' என்று சொல்லி விட்டு அதே மூச்சில் ''அம்மா என்றழைக்காத உயிரில்லையே'' என்று நான் எழுதிய பாடலைக் கேட்டு அம்மா மீது பாசமே இல்லாதிருந்த எத்தனையோ பேர் இப்ப திருந்திட்டதா எனக்குக் கடிதம் போட்டிருக்காங்க'' என்று முரண்பாடாக உளறுகிறார் வாலி.

'அம்மா' பாட்டைக் கேட்டு ரசிகர்கள் மனம் திருந்தியது உண்மையென்றால் 'சமஞ்சது எப்படி' என்று ரோட்டில் போகிற பெண்களையெல்லாம் அதே ரசிகர்கள் துரத்துவார்கள் என்பதும் உண்மைதானே!

'ஓயே... ஓயே...' என்றும், 'சோளிகே பீச்சே கியா ஹை' என்று அருவருக்கத்தக்க முறையில் பாடியவாறே மாணவர்கள் கும்பல்கும்பலாகப் பெண்களைத் துரத்தியது வடநாட்டு பத்திரிகைகளில் வரவில்லையா?

'யக்கா யக்கா' என்று பாடி கோடிக் கணக்கில் காசைச் சுருட்டிக் கொண்டு காரியக் கிறுக்கன் ரஜினிகாந்த் இமயமலைக்கு தியானம் செய்யப் போய்விடலாம். நாலும், அஞ்சும் சம்பாதிக்க பெட்டிக்கடை வைத்து உட்கார்ந்து கொண்டிருக்கும் ஏழைப் பெண்களைப் பார்த்து விடலைகள் 'யக்கா... யக்கா' என்கிறார்களே, இதற்குப் பொருள் என்ன? சகோதர பாசமா?

அன்றாடப் புழக்கத்தில் உள்ள சொற்களுக்கே வக்கிரமான பொருள் கற்பித்து பாடல்கள் வெளிவந்த பின்னால், அச்சொற்களைப் பயன்படுத்துவதற்கே பலரும் தயங்கும் நிலை ஏற்பட்டுள்ளதே - இது பொய்யா?

'பெஞ்சு டிக்கெட்டு'
வர்க்கத்தின் ரசனையின்
விளைவாகத்தான்
ஆபாசம் அதிகரித்தது
என்கிறார்
— கமலஹாசன்



மாணவியாக, ஆசிரியையாக, தொழிலாளியாக, ஊழியராக, நண்பராக சமூகத்தின் பல்வேறு துறைகளிலும் பழகும் பெண்களை, முதல் பார்வையிலேயே துகிலுரித்து பார்க்கும் வெறியை இப்பாடல்கள் உருவாக்கவில்லையா?

ஒரு பாடலாக இருக்கட்டும்; ஒரேயொரு சொல்லாக இருக்கட்டும், அதன் சமூக விளைவு என்ன? காதரீனின் வார்த்தைகளில் சொன்னால் ''வெறி கொண்ட வேட்டை நாயை ''சூ'' என்று ஏவி விடுபவைதான்'' இந்தப் பாடல்கள். (பார்க்க : பெட்டிச் செய்தி)

பாடல்கள் மட்டுமல்ல; பாலியல் 'போலித்தனங்களுக்கு' எதிரான பாலகுமாரனின் ஆவேசமும், பாலுணர்வை 'அடக்கி வைப்பதற்கெதிரான' கமலஹாசனின் அக்கறையும், பாலியல் கலகக்காரர்களின் 'அதிர்ச்சியூட்டும்' பிரகடனங்களும், ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ வேட்டையாட மட்டுமே உதவும். மேற்படி சுதந்திர புருஷர்களின் நோக்கமும் அதுதான்.

ஒன்பது கொலைகள் செய்த ஜெயப்பிரகாஷ் 'நூறாவது நாள்' படம் பார்த்த பின்னர்தான் அத்தகைய முடிவுக்கு வந்ததாகக் கூறினான். மணிவண்ணன் கைது செய்யப்படவில்லை. சினிமாவைப் பார்த்து 'மன எழுச்சி' பெற்று திருடப் போன டீன் ஏஜ் இளைஞர்களும், தற்கொலை செய்து கொண்ட பருவம் வராத காதலர்களும் ஏராளம். எல்லோரும் 'இன்ன சினிமாவில் கூறியுள்ளபடி' என்று வாக்குமூலமும் கொடுத்துள்ளார்கள். இருப்பினும், இத்தகைய கொலைகளையும், தற்கொலைகளையும் தூண்டிய இந்தத் திரையுலக சமூக விரோதிகளுக்கெதிராக சட்டப்படி எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

ஆனால் 'பார்ப்பன ஜெயலலிதா' என்ற ஒரு சொல்லை பயன்படுத்தியதற்காக ம.க.இ.க. தோழர்கள் மீது டஜன் கணக்கில் வழக்கு உண்டு. ஏனென்றால் ''பேச்சாலோ எழுத்தாலோ அல்லது சைகையாலோ மத, இன, மொழி, சாதி சம்பந்தமான விரோத உணர்ச்சியைத் தூண்டுவது இ.பி.கோ. 153 - A பிரிவின்படி குற்றம்'' இதற்கு 3 ஆண்டு சிறை தண்டனை விதிக்கலாம்.

''ஆயுதப் புரட்சி'' என்று மேடையில் பேசியதற்காக ஏராளமான வழக்குகள் உண்டு. ஏனென்றால் ''இ.பி.கோ.124 - A பிரிவின்படி சட்டபூர்வமாக அமைக்கப்பட்டுள்ள அரசுக்கு எதிராக வெறுப்பையும் விரோதத்தையும் எழுத்தாலோ, பேச்சாலோ, ஜாடையாலோ, படத்தாலோ தூண்டினால்'' அது ஆயுள் தண்டனைக்குரிய குற்றம்.

ஒரு குறிப்பிட்ட தனிநபரின் நன்மதிப்பு கெடும் என்று தெரிந்தே அவரைப்

படிப்பகம்

www.padippakam.com

பற்றி பேச்சால், எழுத்தால், அறிகுறியால் வசை சாட்டினால் அவ்வாறு செய்பவரை இ.பி.கோ. 499-வது பிரிவின்படி அவதூறு குற்றத்துக்காகத் தண்டிக்கலாம்.

ஒருவரது பேச்சு அல்லது எழுத்தின் விளைவாக பார்ப்பனர்க்கெதிரான தாக்குதல் எதுவும் நடக்கவில்லையென்றாலும், அரசுக்கெதிரான கலகம் வெடித்துக் கிளம்பவில்லையென்றாலும், பேச்சாளர் அல்லது எழுத்தாளரின் நோக்கம் கலகத்தைத் தூண்டுவதாக இருந்தாலே அவர் தண்டனைக்குரிய குற்றவாளியாகிறார்.

அப்படியானால் பெண்ணினத்திற்கெதிரான குற்றங்களை வெளிப்படையாகத் தூண்டிவிடும் பாடலாசிரியர்களுக்கு என்ன தண்டனை? ஒன்றும் கிடையாது.

தணிக்கைக் குழு என்ன செய்கிறது? 'என்னுடைய பாண்ட் கூட செக்ஸி' என்பதை முற்போக்கான பிரகடனமாக ஏற்றுக் கொள்கிறது.

''எலந்தப் பயம் பாடலுக்கு அனுமதி மறுத்த வானொலி, அண்மையில் 'தாமரை' என்ற படத்தில் 'வாய்யா வந்து வச்சுக்கய்யா' என்ற பாடலுக்கு அப்ரூவல் தருகிறது...''

''ஓராண்டு காலம் சினிமா தணிக்கை குழு பானல் உறுப்பினராக செயலாற்றியதில் நான் தெரிந்து கொண்டது - தணிக்கை விதிகளை உள்ளது உள்ளபடி அமல்படுத்தினால் நூற்றுக்கு எழுபது படங்கள் வெளிவரவே முடியாது என்பதுதான். பகுத்தறிவுக்குப் புறம்பான விஞ்ஞான மனோபாவத்தை வளர்க்காத படங்களை அனுமதிக்கக்கூடாது என்றொரு விதி. இதன்படி ராம. நாராயணனின் 'பக்தி'ப் படங்கள் ஒன்றுகூட ரிலீசாக முடியாது. பெண்களை இழிவு படுத்துகிற காட்சிகளை விதிப்படி வெட்டினால் பல படங்களில் மூன்றில் ஒரு பாகம் கூடத் தேறாது'' - என்கிறார் பத்திரிகையாளர் ஞாநி.

''இனி நடன அசைவுகள் எல்லாம் உடலுறவுக் காட்சியையே சித்தரிக்கும் - ஆனால் நடிகர்களின் உடலில் உடை இருக்கும்'' என்று இந்திய சினிமாவின் எதிர்காலத்திற்கு குறி சொல்கிறார் இந்தி இயக்குனர் யாஷ் சோப்ரா. மேற்கிலிருந்து வீசும் சுதந்திரக் காற்று இந்தியப் பெண்களின் உடையைத்தான் முதலில் குறி வைக்கிறது.

''எம்.டி.வி.யில் வருகின்ற பாலுறவுப் பாடல்களும் நடனங்களும்தான் இத்தகைய போக்கை தமிழ் சினிமாவிலும் வளர்த்து விட்டுள்ளன'' என்று நழுவுகிறார் கங்கை அமரன். போட்டி போட்டுக் கொண்டு ஆண் - பெண் உறவை மலிவுப் படுத்திக் காசாக்குவதற்கு இவர்களுக்கு எம்.டி.வி. ஒரு சாக்கு.

''சார் வர்றீங்களா'' என்று காதும் காதும் வைத்தாற்போல அழைப்பவனுக்குப் பெயர் விபச்சாரத் தரகன். தமிழ்ச் சமூகம் முழுவதையும் 'வர்றியா' என்று ஒரே நேரத்தில் கேட்கும் 'ஆற்றல்' பெற்றவர்களுக்குப் பெயரோ 'தமிழ் சினிமா கவிஞர்கள்'.

''நல்லது கெட்டது நாலும்தான் இருக்கும்... பூஜையறையைக் கட்டினவன்தான் டாய்லெட்டையும் கட்டியிருக்கான். நீங்க ஏன் டாய்லெட்டையே பார்த்துக்கிட்டிருக்கீங்க?'' என்று மடக்குகிறார் 'கவிஞர்' வாலி.

அதுவும் சரிதான்; காசு, பணம், கார், பங்களா, மாலை, மரியாதை என்று திகட்டிப் போகுமளவு இவர்கள் நல்லதை அனுபவித்து விட்டார்கள் - தமிழ் மக்களின் தயவில், 'கெட்டதை' அனுபவிப்பது என்றால் என்ன? நாம்தான் அவர்களுக்குப் புரியவைக்க வேண்டும்.

● சூரியன்




காதரீன் மெக்கின்னான் - அமெரிக்காவைச் சேர்ந்த சட்டவியல் கோட்பாட்டு வல்லுனர்; பெண் விடுதலை இயக்கம் சார்ந்தவர். ''வெறும் வார்த்தைகள்தான்'' (Only Words) இது இவர் சமீபத்தில் எழுதி வெளியிட்டுள்ள நூல்.

ஆபாச எழுத்துக்களும், சினிமா போன்றவையும் பெண்களுக்கெதிரான பலவகையான குற்றங்கள் இழைப்பதற்கு ஆண்களைத் தூண்டுகின்றன என்பது இவரது வாதம். ஆண் ஆதிக்கம் முதல் பாலியல் வன்முறை வரை எதுவும் இதற்கு விதிவிலக்கில்லை என்கிறார் காதரீன். ''ஆபாசத்தை நுகர்பவன் அதை அத்தோடு மறந்து விடுவதில்லை; உடனடியாகவோ, சற்று காலம் தாழ்த்தியோ, தான் பார்த்ததையும் கேட்டதையும் நடைமுறைப் படுத்த முயல்கிறான். எனவே 'உரிமை' என்ற பெயரில் ஆபாசத்தை அனுமதித்தால், 'பேச்சு' என்ற வடிவத்தில் பெண்கள் மீதான பாலியல் வன்முறையை ஒரு உரிமையாக அங்கீகரிக்கிறோம். பாதுகாக்கிறோம் என்றுதான் பொருள்''

காதரீன் முன்வைக்கும் வாதங்களில் உள்ள நியாயத்தை உணர்ந்த கனடாவின் உச்சநீதி மன்றம், அந்நாட்டின் ஆபாசத் தடுப்பு சட்டங்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளைத் தள்ளுபடி செய்தது.

காதரீனின் கருத்துகளுக்கு எதிர்ப்பும் கிளம்பியது. அவரது நூலுக்கு விமரிசனம் எழுதிய கார்லின் ரோமானோ என்ற விமரிசகர் கீழ்க்கண்டவாறு எழுதினார்:

''காதரீனின் நூலை விமரிசிப்பதற்கு இறங்குவதற்கு முன்னால் அவளுடன் பலாத்காரமாக உடலுறவு கொள்வது என்று நான் முடிவு செய்கிறேன் என்று வைத்துக் கொள்வோம். ஏன் இவ்வாறு கூறுகிறேனென்றால், பலாத்காரம் செய்யப்படுவதற்கும் ஆபாச எழுத்துக்களைப் படிக்க நேர்வதற்கும் உள்ள வேறுபாட்டை காதரீன் அறிந்திருக்கிறாளா என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது; அவளது பிரகடனத்தைப் பற்றிய விமரிசனத்தை எழுதுவதற்கு இந்த 'ஆய்வு' (அதாவது பலாத்கார உடலுறவு) அவசியம் என்று கருதுகிறேன்''.


இதைப்படித்த காதரீன் ஆத்திரமடைந்தார். ''என்னுடைய நூலை விமரிசிப்பதற்கு முன்னால் என்னை பலாத்காரம் செய்ய வேண்டும் என்பதே ரோமானோவின் விருப்பம் (இவ்வாறு எழுதியதன் மூலம்) அதை நிறைவேற்றிக் கொண்டுவிட்டார்'' என்று கூறி தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததற்காக ரோமானோ மீது வழக்கு தொடர்ந்தார்.

ரோமானோ கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கிறார். பெண் விடுதலை இயக்கங்களெல்லாம் ஒரே குரலில் கூறுகின்றன - பாலியல் வன்முறைக் குற்றத்திற்காக ரோமானோ தண்டிக்கப்பட வேண்டுமென்று.

''நான் காதரீனை பலாத்காரம் செய்யவில்லை; பலாத்காரம் செய்வது போல என் மனதிற்குள் கற்பனை செய்து கொண்டேன் அவ்வளவுதான், இரண்டிற்கும் வேறுபாடில்லையா?'' என்று சிறைக் கம்பிகளுக்குப் பின்னாலிருந்து 'நியாயம்' கேட்கிறார் ரோமானோ.

வாலியையும் பவித்ரனையும் தான் கேட்டுச் சொல்ல வேண்டும்.

www.padippakam.com




# குலக்கல்வித் திட்டத்தின் புதிய அவதாரம்

சென்னை வானொலியின் 'நகர்வலம்' நிகழ்ச்சியில் ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்ப்பதில் உள்ள பிரச்சினைகள் குறித்து ஒரு ரிக்ஷா ஓட்டுனரின் பேட்டி சமீபத்தில் ஒலிபரப்பப்பட்டது.

''நான் ரிக்ஷா ஓட்றேங்க; நம்ம காலந்தான் படிப்பில்லாம இப்பிடி வீணாப் போயிடுச்சி; நம்ம பையனையாவது படிக்க வச்சிரனும்னு நர்சரி ஸ்கூல்ல சேத்துவுடப் போனா அங்க 10,000 ருபாய் டொனேசன் கேக்குறாங்க; பத்தாயிரம் ருவா கட்ட முடிஞ்சா நான் ஏன் இப்பிடி இருக்கிறேன்.''

நீங்க ஏன் இங்கிலீஷ் பள்ளிகூடத்துக்கு போறீங்க? கார்ப்பரேசன் பள்ளிக்கூடத்துல சேக்க வேண்டியது தானே?

''தெனம் நம்ம ரிக்ஷாவுல புள்ளங்கள ஏத்திகிட்டு போறேன். அதுங்க தஸ் புஸ்னு இங்கிலீஸ்ல பேசறத கேக்குறப்போ, நம்ம புள்ளையும் அப்டி படிக்கணும்னு ஒரு ஆசை. சேரிய வுட்டு வெளியே வரணும்னு தானே படிக்க வக்கிறோம். கார்ப்பரேசன் பள்ளிக்கூடத்துக்கும் சேரிக்கும் என்ன வித்தியாசம்?''

அந்த ரிக்ஷாத் தொழிலாளி கனவு காண்பது போல அவரது மகனுக்கு கான்வென்ட் கல்வி கிடைப்பது இருக்கட்டும்; 'கார்ப்பரேசன் கல்வி'யாவது தொடர்ந்து கிடைக்குமா என்பதே இன்றைய கேள்வி.

''இந்த அரசியல் சட்டம் அமலுக்கு வரும் நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்குள் 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் அனைவருக்கும் இலவச அடிப்படைக் கல்வியை வழங்க அரசு முயற்சிக்கும்'' - என்று கூறுகிறது இந்திய அரசியல் சட்டத்தின் 45-வது பிரிவு. நாற்பது ஆண்டுகள் கடந்துவிட்டன; ஆனால் இந்தப் பொய்ச் சத்தியம் இன்னும் நிறைவேறவில்லை.

1992-இல் மக்களின் கல்வி உரிமை பற்றி உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது. மோகினி ஜெயின் என்ற மாணவி, சுயநிதிக் கல்வியை ஆதரிக்கும் கர்நாடக அரசின் சட்டத்திற்கெதிராகத் தொடுத்த வழக்கில் நீதிபதி குல்தீப் சிங் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்:

''வழிகாட்டும் கோட்பாடுகள் நிறைவேற்றப்படாதவரை 'அடிப்படை உரிமை'களால் எந்தவிதப் பயனும் இல்லை. ஒரு குடிமகன் கௌரவத்துடன் வாழ்வதற்கான ஆற்றலைப் பெறுவதற்கே கல்வி இன்றியமையாதது. எனவே 'உயிர் வாழும் உரிமை' எனும் அடிப்படை உரிமையிலிருந்து 'கல்வி பெறும் உரிமை'யைப் பிரிக்கவியலாது''.

இந்தத் தீர்ப்பு அடிப்படைக் கல்வியை அதாவது கட்டாய இலவசக் கல்வியைப் பெறுவது ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படை உரிமை என்று கூறியது இந்தியக் குடிமகனின் அடிப்படை உரிமையான உயிர் வாழும் உரிமை என்பது எதிர்மறை உரிமை அல்ல; அதாவது ''சட்டபூர்வமான வழிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் வேறு எந்த முறையிலும் ஒரு இந்தியக் குடிமகனின் உயிரை அரசு பறிக்க முடியாது என்பது மட்டுமல்ல உயிர்வாழும் உரிமையின் பொருள். உயிர் வாழ்வதற்கான ஆதாரத்தை நேர்மறையில் வழங்குவது அரசின் கடமை. இல்லையேல் இவ்வுரிமைக்கு அர்த்தமில்லாமல் போய்விடும்'' என்று அத்தீர்ப்பு விளக்கியது.

லாக்-அப் கொலைகளும், 'மோதல்' கொலைகளும் அன்றாட நடப்பாகி, உயிர்வாழும் உரிமையே 'வழிகாட்டும் கோட்பாடாக' மாறிவரும் காலத்தில் புதிதாக இன்னொரு அடிப்படை உரிமையை இந்திய மக்களுக்கு உச்சநீதிமன்றம் வழங்கியிருப்பது ஒரு குரூரமான நகைச்சுவை.

சொல்லப்போனால் இப்படியொரு தீர்ப்பு வந்தபிறகு வழிகாட்டும் கோட்பாடாகக் கூட கல்வியளிக்கும் கடமையை ஏற்க முடியாது என்று மைய, மாநில அரசுகளும் அமைச்சர்களும் பகிரங்கமாகப் பேசத் தொடங்கியிருக்கின்றனர். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 7.6 சதவீதமாக இருந்த கல்விக்கான நிதி ஒதுக்கீடு தற்போதைய எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2.4 சதவீதமாகத் தேய்ந்துவிட்டது. இருப்பினும் 8-வது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் - அதாவது மார்ச் 1997-க்குள் 14 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் ஆரம்பக் கல்வி வழங்கப்பட்டுவிடும் என்று கூறுகிறது மைய அரசின் திட்ட ஆவணம். ஆனால் எட்டாவது திட்டத்திற்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்போ, 5 முதல் 14 வயது சிறுவர்கள் 9.5 கோடி பேர் பள்ளிக்கூடத்தையே கண்ணால் பார்க்கவில்லை என்றும் கூறுகிறது. 1997-க்குள் இந்தச் சிறுவர்கள் எல்லாம் 'இலவச கட்டாயக் கல்வி' பெற்று விடுவார்களா?

அதில் என்ன சந்தேகம் என்று கேட்கிறது ஜெயலலிதா அரசு. தமது பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாத பெற்றோருக்கு தலா 100 ருபாய் அபராதம் விதிக்கப்போவதாக ஒரு பாசிஸ்டுக்கே உரிய திமிர்த்தனத்துடன் அறிவிக்கிறார் ஜெயலலிதா.

அடிப்படைக் கல்வி அளிக்கும் பொறுப்பை நிறைவேற்றத் தவறிய அரசைக் கண்டனம் செய்தார் நீதிபதி குல்தீப் சிங். அதே தவறுக்குப் பெற்றோரைக் குற்றவாளியாக்கித் தண்டனை வழங்குவதன் மூலம் உச்சநீதிமன்றத் தீர்ப்பை 'ஜெ' அரசு கேலிக்கூத்தாக்கிவிட்டது.

இன்னொருபுறம், 50 குழந்தைகளுக்குக் குறைவாக இருந்தால் அந்தப் பள்ளிகளைக் 'கட்டுப்படியாகாத பள்ளிகள்' என்று அறிவித்து இழுத்து மூடச் சொல்லி தமிழக அரசின் கல்வித்துறை சுற்றறிக்கை அனுப்புகிறது. 300 பேர் மக்கள் தொகை உள்ள கிராமம் ஒவ்வொன்றிலும் ஒரு ஆரம்பப்பள்ளி இருக்க வேண்டும் என்ற ஏட்டளவிலான முந்தைய கொள்கையும் இப்போது தலைகீழாக மாற்றப்படுகிறது. 1995-க்குள் தமிழகம் முழுவதும் இத்தகைய 5000 பள்ளிகள் கட்டுப்படியாகாத பள்ளிகளாகக் கருதி மூடப்படவுள்ளன. அந்த மாணவர்

படிப்பகம்

www.padippakam.com

கள் படிக்க விரும்பினால் 8, 10 கிலோ மீட்டர்கள் நடந்து சென்று ஏதேனும் ஒரு 'கட்டுப்படியாகும்' பள்ளியில் போய்ப் படித்துக் கொள்ள வேண்டியதுதான். சென்னை மாநகராட்சியில் மட்டும் ஏற்க னவே 57 ஆரம்பப்பள்ளிகள் இவ்வாறு மூடப்பட்டுவிட்டன.

ஒரே ஒரு ஆசிரியரைக் கொண்ட ஆரம்பப்பள்ளிகளின் எண்ணிக்கை தமி ழகத்தில் மட்டும் 3000. ஆரம்பப்பள்ளி கள் மட்டுமே ஓராசிரியர் பள்ளிகளாக இருந்தது போக உயர்நிலைப் பள்ளிகளே ஓராசிரியர் பள்ளிகளாக மாறும் நிலை தோன்றியுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் ஓர் உயர்நி லைப் பள்ளியில் இரண்டே ஆசிரியர்கள் தான் உள்ளனர் என்றும், அந்தப் பள்ளி யின் அலுவலக எழுத்தரே தமிழாசிரிய ராகவும் பணியாற்றுவதாகவும், ஒரு வகுப்பில் 280 மாணவர்கள் அடைக்கப்ப டுவதாகவும் தினமணியில் வெளியான ஓர் ஆய்வுக் கட்டுரை கூறுகிறது. ஆசிரி யர்க்கான காலியிடங்களை நிரப்பாதது ஏன்?

ஆசிரியர் பயிற்சி முடித்த தகுதி வாய்ந்த 60,000 பேர் தமிழகத்தில் ஆண் டுக்கணக்கில் வேலையின்றிக் காத்திருக் கிறார்கள். ஏறத்தாழ 50,000 காலியிடங் கள் நிரப்பப்படாமல் உள்ளன. தமிழக அரசு அவற்றை நிரப்புவதாகவும் இல்லை. மாறாக, "ஓய்வு பெறுவதாலும், பணிக்காலத்தில் இறப்பதாலும் தோன்று கின்ற காலியிடங்களைக்கூட நிரப்பக்கூ டாது" என்று எல்லாப் பள்ளிகளுக்கும் கல்வித்துறை சுற்றறிக்கை அனுப்புகிறது. போதிய ஆசிரியர்கள் இல்லாத பள்ளிக ளில் உயர் வகுப்பு மாணவர்களைக் கொண்டே கற்பித்துவிடலாம் என்ற திட் டம் பரிசீலிக்கப்படுகிறது.'

ஆரம்பப் பள்ளிகளும், உயர்நி லைப் பள்ளிகளும் தம்மைத்தாமே சுய மாகப் பராமரித்துக் கொள்ள வேண்டும் என்ற கோட்பாட்டைத் திருட்டுத்தனமாக அமல்படுத்துவதற்கென்றே 'பெற்றோர் - ஆசிரியர் சங்கங்கள்' பயன்படுத்தப்படு கின்றன. ஆரம்பப் பள்ளிக்கே ரூ. 1000 கட்டாய வசூல் நடத்தப்படுகிறது. பல இடங்களில் வாங்கிய பணத்திற்கு ரசீது தரப்படுவதில்லை. இந்தக் கொள் ளையை ஊக்குவிப்பதற்காகவே இவற் றைத் தணிக்கை செய்யும் அதிகாரம் கல் வித் துறைக்கு இல்லாமல் செய்யப்பட் டுள்ளது. இவையன்றி, இனி துவக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி ஆசிரி யர்களும் மாணவர்களும் புரவலர்க ளைத் தேடிக் கண்டுபிடித்து அவர்கள் தரும் தொகையை வைப்புநிதியாகக் கொண்டு அதில் கிடைக்கும் வட்டியில் ஆசிரியர்கள் வயிறு வளர்க்கவும், மாண வர்கள் கல்வி கற்கவும் வேண்டும் என் றொரு திட்டமும், புளியமரம் வளர்த்துப் புளி விற்றுத் துவக்கப்பள்ளி நடத்தலாம் என்ற யோசனையும் அரசால் முன்வைக் கப்படுகின்றன.

அதாவது, சத்துணவுக்காகத் தட் டேந்தும் பிள்ளைகள் இனி கல்விக்காக உண்டியல் ஏந்திப் பிச்சை எடுக்க வேண் டும்; புளியம்பழம் பொறுக்க வேண்டும். இப்படி ஏழு கடல் தாண்டி, ஏழு மலை தாண்டி உயர்நிலைப்பள்ளியையும் தாண்டி வரும் கிராமப்புறத்து - தாழ்த்தப் பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அதற்குப்பின் மருத்துவ, பொறியியல் கல்லூரிகளில் '69 சதவீத சமூகநிதி'க்கா கப் போராடலாம். குலக்கல்வித் திட்டம் கொண்டு வந்தவர் குல்லுக பட்டர்; புளிய மரத்திட்டம் கொண்டு வருபவர் புரட்சித் தலைவி!

துவக்கப் பள்ளிகள் மூடப்படும் தமிழ் நாட்டில் சமீப காலங்களில் 24,500 மழலை (நர்சரி) பள்ளிகள் முளைத்துள் ளன. லாப நோக்குடன் நடத்தப்படும் இந் தத் தனியார் பள்ளிகளில் 8,000-க்கு அரசு அங்கீகாரம் தர உள்ளது. ஆரம்பக் கல்வியை இலவசமாக மக்களுக்குத் தர வேண்டிய தமது கடமையிலிருந்து தவறி யது மட்டுமல்ல, அதனை வியாபாரம் செய்வதற்கும், இந்த நடவடிக்கையின் மூலம் அரசு அனுமதியளிக்கிறது.

> குலக்கல்வித் திட்டம் கொண்டு வந்தவர் குல்லுக பட்டர் புளிய மரத்திட்டம் கொண்டு வருபவர் புரட்சி தலைவி! சத்துணவுக்காகத் தட்டேந்தும் பிள்ளைகள் கல்விக்காக இனி உண்டியலும் ஏந்த வேண்டும்.

கல்வி கற்பிப்பது சேவையா? வர்த் தகமா? குல்திப் சிங் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து 'கல்வி வள்ளல்கள்' உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்த போது இந்தக் கேள்விக்கு விடை காண வேண் டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

"ஒரு கல்வி நிறுவனம் என்பது மற் றெந்த தொழில் அல்லது வியாபாரத்தை போன்றதுதான்; எனவே கல்விச் சந்தை யிலும் (வர்த்தக) சுதந்திரம் அனுமதிக்கப் பட வேண்டும். ஒரு வேளை இந்தக் கோட்பாட்டை நீதிமன்றம் ஏற்க மறுத்தா லும், கல்வி என்பது அரசாங்கத்தின் ஏக போகமாக இருக்க முடியாது என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்" என்று வள் ளல்கள் வாதிட்டனர். அண்ணாமலைப் பல்கலைகழகத்தின் எம்.ஏ.எம். இராம சாமி தனது பல்கலைக் கழகத்தை மூடிவி டுவதாகக்கூட மிரட்டினார்.

"கல்வியை இலவசமாகப் பெறுவ தற்கு ஒரு நபருக்கு எவ்வளவு உரிமை உண்டோ, அதே அளவு உரிமை கல் வியை விலை கொடுத்து வாங்குவதற் கும் இன்னொருவருக்கு உண்டு" என்று இந்து எக்ஸ்பிரஸ் நாளேடுகளில் 'அவாள்' கடிதங்கள் வெளியாயின. டெல்லி பல்கலைக்கழகத் துணை வேந்தர் உபேந்திர பக்சியைத் தவிர வேறு எந்தத் துணை வேந்தரும் இலவச கல்விக்கு ஆத ரவாக நீதிமன்றத்தில் கருத்து தெரிவிக்க வில்லை.

உச்சநீதிமன்ற நீதிபதிகளும் இவ்வி சயத்தில் இரண்டாக உடைந்தனர். கடை சியில் உயர்கல்வியைப் பொருத்தவரை 50% இடங்களை தகுதி உள்ள மாணவர்க ளுக்கு குறைந்த கட்டணத்திலும், 50% வியாபாரமாகவும் நடத்திக் கொள்ள லாம் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கி யது. இவற்றுக்கான கட்டண விகிதங்க ளுக்கு உச்ச வரம்பு நிர்ணயித்தது. மாண வர்கள் சேர்க்கைகளும் அரசு மூலமா கவே நடைபெற வேண்டும் என்று உத்திர விட்டது.

"கல்வி கற்பித்தல் என்பது சேவை தான்; வர்த்தகமல்ல" என்று குறிப்பிட்ட நீதிபதி ஜீவன் ரெட்டி, "கல்விக்கு பணம் வசூலிப்பது என்பது தார்மீக ரீதியாக இழிவானது, மக்கள் நலக்கோட்பாடுக ளுக்கு எதிரானது" என்று குறிப்பிட்டார். 50-50 தீர்ப்பை வழங்கிய உச்சநீதிமன் றம் கல்வி கற்பிப்பது அரசின் பொறுப்பு தான் என்றும், தனியார் இந்த விசயத்தில் அரசுக்கு உதவ மட்டுமே செய்யலாம் என்றும் குறிப்பிட்டது.

நடைமுறையில் இந்தத் தீர்ப்பின் விளைவு என்ன? நகர்புறத்தில் தரமான கல்வி நிறுவனங்களில் படித்த, மேட்டுக் குடி வர்க்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் தான் உயர் நிலைப்பள்ளித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறுவதால் இந்த பிரிவினர்தான் உயர்கல்விலே 50% குறைந்த கட்டணத்திலான இடங்களை பிடித்துக் கொண்டனர். சிறு நகரம் மற்றும் கிராமப் புறங்களில் படித்து வரும் மாண வர்கள் நுழையவே முடியாத நிலையும் பெரும் நன்கொடை செலுத்த வேண்டிய நிலையும் உருவாகியிருக்கிறது.

அரசுத்துறையை உறிஞ்சி தனியார் துறை கொழுப்பதற்கும் அரசுத் துறையில் அதிகார வர்க்கம் மற்றும் ஓட்டுக் கட்சிக ளின் ஊழல் பெருகுவதற்கும் கலப்புப் பொருளாதாரக் கோட்பாடு பயன்பட்ட தைப் போலவே இந்தத் தீர்ப்பும் பயன் பட்டு வருகிறது.

தனியார் கல்வி நிறுவனங்களுக்கு பல்கலைக் கழகமும், கல்வித் துறையும் அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்ற விதி முறை மாட்டுக் கொட்டகைகளை யும் கல்லூரிகளாக அங்கீகரிப்பதற்கே பயன்படுகிறது. நுழைவுத் தேர்வு மதிப்


படிப்பகம்

www.padippakam.com

பெண்களை திருத்துவதற்கு கொடுக்க வேண்டிய லஞ்சம், பணம் கட்டி படிப்பதற்கு ஆகும் செலவைவிடக் குறைவு என்பதால் நுழைவுத் தேர்விலேயே லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. மாணவர்களுக்கு விருப்பமான கல்லூரியில் இடம் ஒதுக்கித் தருவதற்கும் 'உரிய கட்டணம்' வசூலிக்கப்படுகிறது.

இவ்வாறு அரசியல் சட்டமும், உச்ச நீதி மன்றமும் தனக்கு வழங்கியுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்திக் கோடி கோடியாய்க் கொள்ளையிடும் அதிகார வர்க்கமும், ஓட்டுக்கட்சிகளும்தான் சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் வசூலிக்கும் கட்டணத்தைக் கண்காணிக்கும் உரிமையையும் பெற்றுள்ளன. நீதிமன்றம் நிர்ணயித்துள்ள வரம்புக்குமேல், ரசீது இல்லாமல் விருப்பம்போல கட்டணம் வசூலிக்கும் கல்லூரிகளிடம் இவர்கள் பங்கு வாங்கிக் கொள்வது குறித்து சொல்லவே தேவையில்லை. பார்க்க: பெட்டிச் செய்தி

கல்வி வர்த்தகமல்ல - சேவைதான் என்றும் அது அரசின் கடமைதான் என்றும் கம்பீரமாக சொற்சிலம்பம் ஆடிவிட்டு 'ஆளுக்குப் பாதி' என்று உச்சநீதி மன்றம் வழங்கிய அவித்தனமான தீர்ப்பு, தனியாரும் அரசும் ஆளுக்கு ஒருமுறை மாணவர்களின் தோலை உரிப்பதற்கு மட்டுமே பயன்பட்டுள்ளது. கொள்ளையடிப்பதற்கான அதிகாரத்தை நடைமுறையில் வழங்கிய இந்த 'புரட்சிகரமான தீர்ப்பு' கல்விக்கான மக்களின் உரிமையை மட்டும் கானல்நீராகவே விட்டு வைத்தது.

1980 முதற்கொண்டே உயர்கல்வி தனியார் மயப்படுத்தப்படுவது, மேட்டுக்குடி மயமாக்கப்படுவதும் தீவிரப்படத் தொடங்கியது. ராஜீவின் புதிய கல்விக் கொள்கை மக்களுக்கு கல்வியளிக்கும் அரசின் கடமையை நிராகரித்ததுடன், விரல்விட்டு எண்ணக்கூடிய மேட்டுக்குடி அறிவுஜீவிகளை உருவாக்கும் நவோதயா போன்ற திட்டங்களை நோக்கி அரசு நிதியை திருப்பி விட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் துணை வேந்தர்கள் மாநாட்டில் பேசிய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங், பல்கலைக் கழகங்களுக்கான மானிய ஒதுக்கீடு பற்றிப் பேசும்போது ''நாம் உலக அளவிலான யதார்த்தங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்று சூசமாகக் குறிப்பிட்டார்.

இதில் சூசகம் ஏதும் இல்லை என்று உண்மையைப் போட்டு உடைத்துவிட்டது புன்னையா குழுவின் அறிக்கை. கல்லூரிகள் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்களுக்கு 'பல்கலைக்கழக மானியக் குழு' அளித்து வரும் நிதி உதவிகளை ஆய்வு செய்த இக்குழு, அரசுக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் மாணவர்களிடம் வசூலிக்கப்படும் கட்டணம் உடனே உயர்த்தப்பட வேண்டும் என்றும், கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் சொந்தமாக நிதி ஆதாரங்களைத் தேடிக் கொள்ள வேண்டும் என்றும் பரிந்துரை செய்துள்ளது.

புன்னையா குழுவின் கணக்கெடுப்பின் படி 'சராசரியாக ஒரு கலைத்துறை மாணவர் பட்டதாரி ஆவதற்கு 22,000 ரூபாயும், விஞ்ஞானத்துறை மாணவனுக்கு 32,000 ரூபாயும் செலவாகிறது; இச்செலவை ஒப்பிடும்போது மாணவர்களிடம் வசூலிக்கப்படும் பயிற்சிக் கட்டணம் (Tuition Fees) மிகக் குறைவு. சென்னைப் பல்கலைக் கழகம் கலைத்துறை மாணவரிடம் 330 ரூபாயும், விஞ்ஞானத் துறை மாணவனிடம் 360 ரூபாயும்தான் வசூலிக்கிறது. இது மிகக்குறைவு. ரூ. 22,000 / 32,000 த்தில் 15% முதல் 25% தொகையைத் தானே வசூலித்துக் கொள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகமும் முயல வேண்டும்''.

''இதற்காக மாணவர்களின் பயிற்சி, தேர்வுக் கட்டணங்களை உயர்த்தலாம்; மாணவர்கள் வங்கிக்கடன் வாங்கி பணம் கட்ட ஏற்பாடு செய்யலாம்; உள்நாட்டு, வெளிநாட்டுப் புரவலர்களைத் தேடலாம்; தொழில் நிறுவனங்கள் தம் தேவைக்கேற்ற ஆய்வுத் துறைகளைப் பல்கலைக்கழகத்தில் துவக்க வைத்து அதற்கு அவர்களிடமே நன்கொடை பெறலாம்; கல்லூரி விளையாட்டுத் திடல், அரங்குகளை வாடகைக்கு விடலாம்'' - என்று பல யோசனைகளை முன் வைக்கிறது.

துவக்கப்பள்ளி மாணவர்களைப் போல இளங்கலை, முதுகலை மாணவர்கள் புளியம்பழம் பொறுக்க ஒத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதால் புன்னையா குழு புளிய மர வளர்ப்பை சிபாரிசு செய்யவில்லை போலும்!

புன்னையா குழு அறிக்கையின் படி பல பல்கலைக்கழகங்கள் மாணவர்கள் கட்டணங்களை உயர்த்திவிட்டன; இந்திய மக்கள் தொடர்பு விஞ்ஞானக் கழகம், ஜப்பான் அரசிடம் 45 கோடி ரூபாய் கடன் கேட்டிருக்கிறது; வெளிநாட்டில் குடியேறப் பிறந்த இந்தியர்களுக்காகவே அரசாங்கம் நடத்திவரும் ஐ.ஐ.டி. வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்கள் மூலம் ரூ. 100 கோடி திரட்டத் திட்டமிட்டுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் கல்லூரி மாணவர்களின் பயிற்சிக் கட்டணத்தை 20 மடங்கு உயர்த்திவிடுவது என்று மகாராட்டிர அரசு முடிவு செய்துள்ளது.

ஆய்வகக்கட்டணம், நூலகக் கட்டணம் என்று பல பெயர்களில் கல்லூரிக் கட்டணம் தமிழகத்திலும் உயர்த்தப்பட்டு வருகிறது. மத்தியப் பிரதேச மாநிலத்தின் பர்கதுல்லாகான் பல்கலைக்கழகம் பி.எஸ்.ஸி. பட்டப்படிப்புகான கட்டணத்தை ரூ. 25,000 என அறிவித்துள்ளது. வரும் ஆண்டுகளில் இந்த நிலை தமிழகம் உள்ளிட்ட எல்லா மாநிலங்களிலும் உருவாக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

'கல்வி அரசாங்கத்தின் பொறுப்பு' என்ற உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு அமல் படுத்தப்படும் லட்சணம் இதுதான். சாதி, மத நிறுவனங்கள், வியாபாரிகள், தரகு முதலாளித்துவ தொழில் நிறுவனங்கள், சாராய வியாபாரிகள், ஓட்டுப் பொறுக்கிகள், மாஃபியா கும்பல்கள் ஆகியோரின் கையில் துவக்கக்கல்வி முதல் உயர் கல்வி வரை அனைத்தும் ஒப்படைக்கப் பட்டுவிட்டன.

கிராமப்புற மக்களில் கொஞ்சம் பேருக்கு கையெழுத்துப் போடக் கற்றுத் தந்துவிட்டு 'அறிவொளி தீபம்' ஏற்றிவிட்டதாகப் பசப்புவதற்கும், ''நூறு சதவீதம் எழுத்தறிவு பெற்ற மாவட்டம்' என்று



படிப்பகம்

www.padippakam.com

புளுகுவதற்கும் மட்டும் அரசு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. 'அனைவருக்கும் அடிப்படைக் கல்வி' என்ற முழக்கத்தை 'அனைவருக்கும் எழுத்தறிவு' என்று குறைத்து, பிறகு அதையும் 'கையெழுத்துப் போடும் அறிவொளி' யாக சுருக்கி அரசு நடத்தும் மோசடிக்கு போலி கம்யூனிஸ்டுகளும் துணை நிற்கின்றனர். முறைசாராக் கல்வி, தொலை தூரக் கல்வி, போன்ற பல பெயர்களில் முறையான கல்வி மறுக்கப்படுகிறது.

மொத்த தேசிய வருவாயில் 6 சதவீதத்தை ஆண்டுதோறும் கல்விக்கு ஒதுக்க வேண்டும் என்று கூறும் புதிய கல்விக் கொள்கையின் அறிவிப்பே கூட மைய அரசால் பின்பற்றப்படவில்லை. 1988-89 இல் 2 சதவீதமும், 89-90 இல் 1.6 சதவீதமும், 90-91 இல் 1.4 சதவீதமும், 91-92 இல் 1.3 சதவீதமும் மட்டுமே கல்விக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. கல்லூரி கட்டணத்தை உயர்த்தச் சொல்லும் புன்னையா குழுவோ, கல்வியை தனியார் மயப்படுத்தக் கூறும் ரெட்டி குழுவோ, உச்சநீதிமன்றமோ கண்ணெதிரில் தெரியும் இந்த அநீதியைப் பற்றி மட்டும் வாயே திறக்கவில்லை.

அவர்களது வாய்க்குப் போடப்பட்டிருப்பது உலக வங்கிக்காரனின் பூட்டு. கல்வி, சுகாதாரம், பொது விநியோகம் ஆகிய துறைகளில் அரசு கொடுத்து வரும் மானியத்தை வெட்ட வேண்டும் என்ற ஐ.எம்.எஃப் - உலக வங்கி உத்தரவின் படிதான் கல்விக்கான ஒதுக்கீடு வெட்டப்பட்டிருக்கிறது.

பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் துறைக்கு விற்றுவிடுவது, அந்நிய நிறுவனங்களுக்கு ரத்தினக் கம்பளம் விரிப்பது, அறிவுச் சொத்துரிமையை வலியுறுத்தும் டங்கல் திட்டத்தை ஏற்பது - போன்ற, நாட்டை முற்றிலுமாக அடகு வைக்கின்ற கொள்கைகள் அமல் படுத்தப்படுகின்றன. ஏற்கனவே அரசு ஏகபோகங்களின் நலனை முன்னிட்டு பெயரளவிலேனும் ஒதுக்கப்பட்டு வந்த ஆய்வுக்கான நிதி ஒதுக்கீடும், உள்நாட்டு விஞ்ஞானிகள் தொழில் நுட்ப வல்லுநர்களை உருவாக்கும் உயர் கல்வி நிறுவனங்களும் இன்று தேவையற்றதாகி விட்டதால் - அவையும் இழுத்து மூடப்படுகின்றன.

ஐ.ஐ.டி போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் பயின்ற மேட்டுக்குடி மாணவர்களில் பலர் மிகுந்த 'நாட்டுப்பற்றுடன்' படித்து முடித்த கையோடு அமெரிக்க விசாவுக்கு மனுச் செய்து காத்திருந்தனர். இனி அந்தச் சிரமமும் இல்லாமல், எல்லா உயர்கல்வி நிறுவனங்களையும் தரகு முதலாளிகள் மற்றும் ஏகாதிபத்தியங்களின் கையில் ஒப்படைத்து, தமக்குத் தேவையான ஆய்வுத் துறைகளைத் தொடங்கவும், தேவையான இந்திய மாணவர்களைக் கொண்டு செல்லவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

புதிய வேலைவாய்ப்புகள் இல்லை என்று ஆகிவிட்டதால் புதிய பட்டதாரிகள் மேலும் மேலும் உருவாவதைத் தடுக்க, கல்வி தனியார் மயமாக்கப் படுகிறது. ஏகாதிபத்திய நிறுவனங்களின் சந்தையாக மதிக்கப்படும் 15 முதல் 20 சதவிகிதம் வரை உள்ள மேட்டுக் குடியினர் மற்றும் நடுத்தரவர்க்கத்தினரைத் தவிர மீதமுள்ள 80% உழைக்கும் மக்களுக்கு எழுத்துக் கூட்டிப் படிக்கும் கல்வி அறிவுக்கு மேல் எதுவும் தேவையில்லை என்பதால் அவர்களைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு அறிவொளி இயக்கத்திடம் விடப்பட்டு துவக்கப்பள்ளிகள் மற்றும் உயர் நிலைப் பள்ளிகளுக்கு மூடுவிழா நடத்தப்படுகிறது.

கல்வித்துறை நிர்வாகம் மற்றும் பாடத்திட்டங்கள் வகுப்பதில் ஆசிரியர் - மாணவர்களுக்கு உரிமை வேண்டும் என்று கல்வித்துறையில் அரசு ஆதிக்கத்துக்கு எதிராக ஏற்கனவே எழுப்பப்பட்டு வந்த முழக்கங்கள் இனி பொருளற்றதாகி விடும். தனியார் முதலாளிகளால் நடத்தப்படும் 'கல்வித் தொழில்' கூடங்களில் ஆசிரியர்கள் கூலிக்காரர்களாகவும், மாணவர்கள் கொத்தடிமைகளாகவுமே நடத்தப்படுவர்.

வரவிருக்கும் சீர்கேடுகளை பட்டியவிட்டு மாளாது. இவையனைத்தும் நாடு மீண்டும் காலனியாக்கப்படும் நிகழ்ச்சிப் போக்கின் பிரதிபலிப்புகளே. மனுவும், மெக்காலேயும், ராஜாஜியும் இல்லாவிட்டால் என்ன? அவர்களது கொள்கை காலத்துக்கேற்ப அமலாகிக் கொண்டுதானிருக்கிறது.

● பாலன்

தமிழகம்:

## தீவட்டிக் கொள்ளை!

"பல நிறுவனங்களில் பெயர்ப்பலகையைத் தவிர எதுவும் இல்லை. இவற்றில் 'பயிற்சி' பெற்றவர்கள் என்று சொல்லப்படும் நபர்கள் (ஆசிரியர்கள்) ஒரு பாவமும் அறியாத ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளின் மீது ஏவிவிடப்பட்டால், அவர்களின் கதி என்னவாகும் என்று நினைக்கவே அச்சமாக இருக்கிறது.... வேறு காரணங்களுக்காகத்தான் (லஞ்சம் வாங்கிக் கொண்டுதான்) இத்தகைய பயிற்சிப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்பதில் எங்களுக்கு ஐயமில்லை" - ஜெ. அரசின் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஊழலைக் கண்டனம் செய்யும் உயர்நீதி மன்றத் தீர்ப்பின் வாசகங்கள் தான் இவை.

தலா 40,000 ரூபாய் பணம் கட்டிய 40,000 மாணவர்களையும் 7,500 ஆசிரியர்களையும் வீதியில் நிறுத்தியிருக்கும் இந்த ஊழலின் விவரங்களை வரிசைக் கிரமத்தில் பார்க்கும் போதுதான் இது ஒரு திட்டமிடப்பட்ட கொள்ளை என்பது புரியும்.

● ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் 45,000 பேர் ஏற்கனவே வேலையின்றி இருப்பதால் புதிய பயிற்சிப் பள்ளிகள் துவங்கக்கூடாது என்றும் பழைய பள்ளிகளும் தங்கள் அனுமதியை அரசிடம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்றும் நவ'91 இல் கல்வித்துறை அறிவித்தது.

● ஆனால் ஜூன்'92 முதல் ஜூலை'92-க்குள், கூரையும் பெயர்ப்பலகையும் மட்டுமே உள்ள 189 புதிய பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி தரப்பட்டது. பல பள்ளிகளுக்கு மனுச் செய்த அன்றே அனுமதி தரப்பட்டதுடன் அனுமதியே பெறாத பள்ளி மாணவர்களும் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர். இவையன்றி 100 அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிகளில் 'ஆசிரியர் பயிற்சி' துவக்கப்பட்டு தலா 30 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்; பின்னர் இதற்கு கோர்ட் தடைவிதித்தது. "மாணவர்களிடம் நாங்கள் வசூலித்த தொகையில் 50% லஞ்சம் கொடுத்தோம்" என ஒரு பயிற்சிப் பள்ளி நிர்வாகி பேட்டியே கொடுத்தார்.

● இந்தப் பள்ளிகளின் அங்கீகாரத்தை கோர்ட் செல்லாது என்று அறிவித்தவுடன், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக 'குறுகிய காலப் பயிற்சி' வகுப்பு நடத்தப் போவதாக அரசு அறிவித்தது. இதையும் சட்டவிரோதம் என்று கோர்ட் தடை செய்தது.

சுயநிதி பொறியியல், மருத்துவக் கல்லூரி ஊழல்களிலும் ஜெ. அரசு முன்னணியில் நிற்கிறது. இந்தச் 'சுயநிதிப் பேய்'களில் பல எம்.ஜி.ஆர் காலத்தில் உருவாக்கப்பட்டவை; அ.தி.மு.க வினருக்குச் சொந்தமானவை.

தமிழகத்தின் 43 பொறியியல் கல்லூரிகளில் 9 தவிர மற்றவை சுயநிதி நிறுவனங்கள், அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் அனந்தகிருஷ்ணனின் கூற்றுப்படி இவற்றில் மூன்றிலிரண்டு பங்கு நிறுவனங்கள் கல்லூரி என்றே அழைக்கப்பட முடியாதவை. எனினும் மொத்தம் இருக்கும் 7500 பொறியியல் இடங்களையும் பணம் காய்க்கும் மரமாகவே ஜெ. கும்பல் பயன்படுத்துகிறது.

எல்லா சீட்டுகளுக்கும் நுழைவுத் தேர்வை அரசுதான் நடத்த வேண்டும் என்பதால் தேர்வு மதிப்பெண் போடுவதில் ஊழல், தேர்வே எழுதாத நபர்களுக்கு அனுமதி, தேர்வு முடிவுகளையும் மதிப்பெண்களையும் வெளியிடாமல் வைப்பது, வேண்டுமென்றே தொலைதூர கல்லூரியில் போட்டு மாற்றலுக்காக மாணவரிடம் காசு பிடுங்குவது, நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள தேதிக்குப் பிறகும் இடங்களை காலியாகவே வைத்திருந்து சீட்டுகளை ஏலம்விடுவது - ஆகிய அனைத்து வழிமுறைகளிலும் பெற்றோர்களும் மாணவர்களும் கொள்ளையடிக்கப்படுகின்றனர்.

நீதிமன்றங்கள் எத்தனை கண்டனங்களை தெரிவித்தும் என்ன? 'சமூக நீதி காத்த வீராங்கனை' யின் ஆட்சி கவலைப்படப் போவதில்லை.



படிப்பகம்

www.padippakam.com



சிறுகதை:

# மாமிசம்

''வித்தியாசமான இளைஞர்களுக்கான படம்'' என்று தினசரி ஏடுகள் பக்கம் பக்கமாய் ஆசை வார்த்தைகள் விதைத்தன. அரசாங்கம் உபதேசிக்கும் சிக்கன நடவடிக்கையை ஆடை வரைக்கும் அரங்கேற்றியிருந்த படத்தின் கதாநாயகியிடம் அனுபவம் கேட்டு வாசகர்களுக்கு முந்தித் தருவதில் போட்டி போட்டன வாரப் பத்திரிக்கைகள். நகரின் குட்டிச் சுவர்களும் மூத்திரச் சந்துகளும் ஒரே நாளில் 'இந்து'வாகியிருந்தது. பழனிக்கும் உற்சாகம் மேலிட்டது. அக்காவோடு வண்டி தள்ளி கறி புரட்டிக் காத்துக் கிடப்பதற்குப் பதிலாக பிளாக்கில் தினம் பத்து டிக்கெட் விற்றாலே மாசம் ஓடிடும் என மனக்கணக்கு போட்டிருந்தான். ஆறு நாள் வரைக்கும் அவன் கனவு எடுபட்டது. ஏழாவது நாளே, ஐந்து அல்லது ஆறு டிக்கெட்டுக்கு மேல் தள்ளுவது மலையாய் இருந்தது.

அன்றும் பத்து டிக்கெட்டில் ஆறை வைத்துக் கொண்டு உள்ளே போகலாமா, வேண்டாமா என யோசனையுடன் நின்று கொண்டிருந்தவர்களிடம் மெதுவாகக் கெஞ்சினான்.

''ஸார் பன்னெண்டு ரூவா டிக்கெட் பாஞ்சிரூவா... பன்னெண்டு ரூவா டிக்கெட் பாஞ்சிரூவா...''

''என்ன பழனி தள்ளிட்ட போலருக்கு''

''நீ வேற, நாலு தள்றதுக்குள்ள பேஜாராயிடுச்சு''

''இந்த உடான்ஸ்தான வேணாங்கறது. அஞ்சு நாளா இன்னா போடு போட்ட, இது போறாதா?''

''இன்னாத்த போறும், நெதய்க்கும் போலீசுக்கு மாமூலும் டிக்கெட் குடுக்குறவனுக்கு நாஸ்ட்டாவும் கொடுத்தே பாதி பூட்ச்சுடா!''

''அலங்கார்ல புது படம் மாத்திட்டான்ல... இனிமே டல்தான்''

''கால ஷோவாவது காலேஜ் கூட்டம் வரும். ஆபீஸருங்க தள்ளிகினு வர்ற டிக்கெட்டும் வரும். நாலு மணி ஷோ கஷ்டந்தான்'' மணி தன்னுடைய அனுபவத்தையும் சோகமாய்ச் சொன்னான்.

''சரி மணி, ஒண்ணு பண்றா, நான் கறி எடுக்க ராயப்பேட்டா போவணும்; இப்ப போனாத் தான் அப்பால வாடிக்கைக்காரன்கிட்ட நண்டும் வாங்கியாற டயமிருக்கும். மீதி ஆறு டிக்கெட் இருக்கு. நீ முடிஞ்ச வரைக்கும் தள்ளிட்டு கவுண்ட்டர்ல குடுத்து நம்ப துட்ட வாங்கியாந்துரு''

''நானே நாலு வச்சிருக்கேன் எப்படி தள்றது'', என்று தலையை சொறிந்தவன், ''சரி, சரி, குடு நைட்டு வந்து துட்டு வாங்கிக்க, இல்லேன்னா நான் துண்ண வர்றப்ப தரேன்'' டிக்கெட்டை வாங்கி சுருட்டி காதிடுக்கில் முடிக்குள் புதைத்துக் கொண்டான். பழனி டிக்கெட்டை ஒப்படைத்துவிட்டுப் புறப்பட்டான். தினம் பதினோரு மணி நாலு மணி ஷோவுக்கு பிளாக்கில் டிக்கெட் விற்று விட்டு இரவில் தள்ளு வண்டிக் கடையில் அக்கா சின்னுவுக்கு உதவியாயிருப்பது தான் பழனியின் தினசரி வேலை.

நொச்சிக் குப்பத்திலிருந்து சின்னுவும் கிருஷ்ணனும் தனியாய் வந்து மவுண்ட் ரோட்டுக்குப் பின்னால் உள்ள குடிசைக்குள் ஒடுங்கிக் கிடந்த போது பழனிக்குப் பதினைந்து வயது. அக்கா புருஷன் இருந்த வரைக்கும் பழனிக்கு இவ்வளவு பொறுப்பு கிடையாது. கிருஷ்ணன் டீ போட்ட கடையிலேயே, கிளாஸ் கழுவிக் கொண்டு இருந்தான். அஞ்சோ பத்தோ அக்காவிடம் கொடுத்து விட்டாவானால் தேவி தியேட்டர் தான் அவனுக்கு திருத்தலம். முப்பது வயதிலேயே கிருஷ்ணன் சாராயத்துக்குப் பலியாய்ப் போக, சின்னு தனியாளாய்த் தவித்திருக்க, இப்போது பழனிதான் பக்கத் துணை.

இரவில் தள்ளு வண்டியை நகர்த்தி மாட்டுக்கறி புரட்ட ஆரம்பித்த தொழில் இப்போது கொஞ்சம் கொஞ்சமாய் நண்டு, மீன் என விரிவடைந்திருந்தது. சின்னுவின் இளமையும் வாடிக்கை மொய்க்கக் காரணமாய் அமைந்தது. மூச்சு முட்ட சாராயத்தைக் குடித்து விட்டு ஏப்பம் விடுவதற்கும் மூழி பிதுங்குகிற ரிக்ஷாக்காரர்கள் இரவு சவாரிக்கு மவுண்ட் ரோடு பக்கம் வந்தால் சின்னு கடை தான் பிடித்தமான உணவிடம். ''தோ பாரு சின்னு, எத்தன நாளுதான் அனாத மாதிரிகெடப்ப, கிருஷ்ணன் தான் அல்பாயுசுல பூட்டான். பேசாம புதுப் பேட்டை வரியா, நம்மளாண்ட எடம் ஒண்ணு கெடக்கு'' என்று 'கரிசனத்துடன்' அவளை மடக்கிப் போட முயலுவான் ரிக்ஷா ராமு. நகரத்தில் கையறு நிலைக்குத் தள்ளப்பட்ட மலிவான ருசிக்கு ஏங்குகின்ற நடுத்தர வர்க்கப் பேர்வழிகளும் ''உங்கிட்ட சாப்பிட்டாதான் வீட்ல சாப்புட்ட மாதிரி இருக்கு'' என்று சிலேடையாய்த் தூண்டில் போடுவதுண்டு.

எல்லாவற்றையும் விட தினமும் பன்றிகளைப் போல வாய் கொள்ளாத அளவு மேய்ந்து விட்டு வீட்டுக்கும் பொட்டலம் கட்டிக் கொண்டு போகும் காக்கிச் சட்டைகளின் வக்கிரமான தீண்டலுக்கும் அவள் ஆளாக வேண்டியிருந்தது.

''ஏய் என்னடா இவ்ளோ நேரம், நாளப் போல உன்னோட பேஜாராகீது. சீக்கிரம் போனாதான கறி நல்லதா இருக்கும்'' வேகமாய் வந்த பழனியை எரிச்சலுடன் பார்த்தாள் சின்னு.



படிப்பகம்

www.padippakam.com

''சும்மாலுமா இருக்கேன். டிக்கெட் தள்ளிட்டு வரலாம்னு பார்தேன். ஒண்ணும் பேர்ல, எதானும் துன்றதுக்குக் குடு''.

''இப்பவே மணி அஞ்சு, நீ துன்னுட்டு எப்ப போயி கறி எடுத்து வந்து நா வேக வைக்கிறதாம்... போய்வா, அப்பால துன்னலாம்''.

''ச்சே உன்கிட்ட மன்சன் துன்ன கூட முடியர்து. பைய குடு'' பையை வாங்கிக் கொண்டு வீசி வீசி நடந்தான்.

''ரெண்டு கிலோ மொளகா, மஞ்சப் பொடி, மசாலா பொட்லம் ஒண்ணு''.. தலையைத் தட்டிக் கொண்டே சின்னு யோசனை வந்தவளாய் ''கொஞ்சுண்டு கொத்தமல்லி கறிவப்பில்ல குடு'' என்றாள்.

கடைக்காரன் ஒவ்வொரு அரிசியாய் வாய்க்கு எறிந்தபடி பித்துப் பிடித்தவன் போல் சின்னுவையே பார்த்தான்.

''தே.. சாமான போடேன்.. என்னவோ மந்திரிச்சுவுட்ட ஆடு மாறி முளிக்கிறே''

இல்ல சின்னு ஒன்னப் பாத்தா வேலையே பிரியல''

''அய்யே.. கயிதக்கு நெனுப்பு வந்தா கட்டச் செவுத்துக்கு ஓடுமாம்; கதையால்ல இருக்குது உன்னுது''

''ரொம்பத்தான் சிலுத்துக்குற; இந்தா புடி'' - கடைக்காரன் மளிகைச் சாமான்களைக் கொடுக்கும் சாக்கில் அவள் கையைக் கொஞ்சம் சீண்டினான் ''அய்யோ!'' என்று தலையில் அடித்துக் கொண்டு ''ந்தா துட்டு'' என்று பணத்தை வைத்துவிட்டு நகர்ந்தாள்.

பழனி அலுமினியப் பாத்திரத்தில் கறியைக் கொட்டி மஞ்சள் பொடி போட்டுப் பிசைந்து கொண்டிருந்தான்.

''இன்னா எல்லாம் இருந்துச்சா! நண்டு வாங்கினியா''

''ஊம்.. மீனு சங்கராதான் இருந்துச்சு''

''சரி நீ கைய கழுவிட்டு குண்டான்ல இருக்குறத துண்ணு. நான் மொளவா போட்டு வேகவுடுறேன்''

''வேணாம் நீயே துண்ணு'' வேண்டா வெறுப்பாய் பேசினான்.

''அய்யே பெரிய ரோசக்காருதான். பூச்சிக்காட்டாம போயி துண்ணுட்டு வண்டிய தொட. சட்டிய வுடு''

வலுக்கட்டாயமாக பழனி கையிலிருந்த கறிச்சட்டியை வாங்கிக் கொண்டு அவனைச் சாப்பிட அனுப்பினாள்.

அலுமினியக் குண்டானிலிருந்த பழஞ்சோற்றையும் கருக்கி வைத்திருந்த கறியையும் மென்று மென்று உள்ளிறக்கினான்.

''கறியா இது நாரா தந்துருக்கான். அதான் முன்னால போவுணுங்குறது நீதான் தியேட்டராண்டயே கெடந்தியே பெரீசா வர்ற மாதிரி''

'' தோ பாரு... அப்பால கோவமாயிடும். நாலு நாளா துட்டு வந்தப்ப நல்ல துன்னரியே. நானும் துட்டு வரும்னுதான் நெனச்சேன். ஒரு நாளு கதையை ஓட்டுவியா பெர்சா கூவிக்னேகீற''

''சரிப்பா நீ மினீஷ்டரு புள்ள நான் ஒன்னும் சொல்லல''

பழனி தள்ளுவண்டியைத் துடைத்து முனை இடுக்கில ஊதுவத்தியைக் கொளுத்தி வைத்தான். ''மணி ஆறுக்கா''.

''இர்ரா இப்பதான் மீனு பொறட்டுறேன்''

''போறும் வா, அங்கே போயி பார்க்கலாம் டயமாச்சு''

அக்காவும் தம்பியுமாய் வண்டியைத்தள்ளி மசாலா கறி மணக்க, மணக்க வியாபாரத்தைத் தொடங்கினார்கள்.

''பயனி வண்டிய ஓரமா போடு... போலீசுகாரன் கிழிச்சுக்கினு கத்துவான்''

''சோமாறி நம்ம கையில துன்னுப்புட்டு துட்டும் வாங்கிட்டு கத்தறாங்கா அவன்''

''நாம வெறப்பு காட்ட முடியாது பொழப்பு அப்படி''

''ஏண்ணே பாத்துக்கினே போற... துண்லியா?!''

வழியாகப் போன வாடிக்கை ஆளை விசாரித்தாள் சின்னு.

''இல்லை சின்னு, பீச்சாண்ட போயி சவாரி பாத்துட்டு வர்லாம்னு நெனச்சேன்''

''இட்லி சூடா இருக்கு அதா கூப்பிட்டேன்''

''சரி அப்ப நாலு வய்யி கறி பொறட்டி போடு''

அவன் சுவைத்துச் சுவைத்து வாயில் தள்ளும்போதே சின்னு பதமாக வார்த்தையை விட்டாள் ''ஏன்னா நீதான் மொத போணி''

அவன் புரிந்து கொண்டான் ''தே கய்தே கடன் வப்பேன்னு பாத்தியா... தோ பாரு துட்டு இருக்கு, இன்னும் ரண்டு வய்யி''

கொஞ்சம் கொஞ்சமாய்க் கூட்டம் சேர ஆரம்பித்தது.

வியாபாரம் களை கட்டியிருந்த தருணம் ரத்தினம் கவுச்சி கண்ட பூனையாய் வந்து நிக்க சின்னுவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

கலவரத்துடன் உளறினாள் ''வா சார் துண்றியா''

''தே இங்க வா'' அதிகாரத்துடன் அழைத்தான் ரத்தினம். குரூரப் பார்வையும் எதையும் தின்னத் துடிக்கும் மாதிரியான அவனது பேச்சும் சின்னுவை கலக்கமடையச் செய்தது.

''பயனி இட்லிய பாரு'' - கொஞ்சம் விலகி வந்து ரத்தினத்திடம் வேண்டினாள் ''இன்னா துட்டா, கொஞ்ச நேரம் போயி வா இன்னும் ஏவாரம் ஆவுல''

''ஏய் துட்டு வாங்க வல்ல நீதான வேணும், எஸ்.ஐ. கூப்புட்டாரு''

''எதுக்கு?'' பதட்டத்துடன் கேட்டாள்.

'தெரியாத மாதரி நடிக்குற... லாட்ஜுக்குத்தான்.'

''அய்யே இன்னாது புதுப்பயக்கம்... துட்டு வாங்கிகினு போவியா... எனக்கு முடியாது.''

''என்னது முடியாதா?... அப்புறம் ஏவாரம் பண்ண முடியாது... பெரிய இவ மாதரி நடிக்கிற. நேத்து பக்கத்துக் கடை மாரி வந்தா தெரியுமா?''

''யோவ் என்னயா இது ரவுசு. அப்பால வர்றேன்னு சொல்லேன்''

அவன் காலிலுள்ள எருமைத் தோல் செருப்பை விடவும் இறுகிப் போன மனசு அவனுக்கு. தனது பிறப்புரிமையை அடைவதைப் போல் அவசரம் காட்டினான்.

''யக்கா, இங்க வந்து பாரு, இட்லி பானை கொதிக்கிது''

''யோவ், இரு ஊத்தி வச்சிட்டு வரேன்'' போக நகர்ந்தவளை திரும்பவும் மடக்கினான் ரத்தினம்.

''தே பாரு மவள ஏமாத்த நெனச்ச இருக்க மாட்ட''.

''தோ வர்றேன் இரு''.

அவசர அவசரமாகக் கொதிக்கும் பானைக்குள் இட்லி மாவை ஊற்றி நிரப்பினாள். மனசும் கொதித்தது. முன்பு ஒரு முறை ரத்தினம் தின்று கொண்டே அவள் தொடையைத் தட்டியபோது ''என்ன பொழப்பு இது'' என்று வெறுத்துப் போனாள். இப்பொழுதும் தொழில் மேல் எரிச்சல் வந்தது.

ரத்தினம் திரும்பத் திரும்ப முறைக்க... இவனிடம் கெஞ்சுவதை எஸ்.ஐ.யிடம் கேட்டுவிட்டு வந்துவிடலாம் என்ற நம்பிக்கையுடன் கிளம்பினாள்.

''பயனி, ஏவாரத்த பாத்துக்க.. தோ வந்திட்ரேன்''

ஆட்டுக்கறி, மாட்டுக்கறியோடு அவள் கறியையும் தின்னக் கேட்கும் வக்கிரத்தை சகிக்க முடியாதவளாய் ஆத்திரமும் அழுகையும் மேலிட சின்னு நகர்ந்தாள்.

பழனி கலக்கத்துடன் சின்னு போன வழியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

● துரை. சண்முகம்

www.padippakam.com

## குடும்பக் கட்டுப்பாடு மருந்துகள்:

# சோதனைப் பிராணியா இந்தியப் பெண்?

பாவம் அந்தப் பெண், ஓயாத ரத்தப் போக்கு. திருகி எடுக்கும் உடல்வலி, கணவன் அருகே வரும் போதெல்லாம் உறவு கேட்டான், அவள் மறுத்தாள், அவன் அடித்தான், உதைத்தான், சித்திர வதை செய்தான். உடம்பு கன்றிப் போய் வலி தாங்க முடியாமல் உள்ளே குமுறினாள். வீட்டு வேலை செய்ய முடியவில்லை - வேலை ஒவ்வொரு நாளும் அவள் முன்னால் குவிந்தது. முடியலியேம்மா என்று அவளால் முனகத்தான் முடிந்தது. மாமியாரோ சொகம் கேக்குதாடி சிறுக்கி என்று விரட்டுவாள். கையில் கிடைத்ததை எல்லாம் எடுத்து மொத்துவாள். வேறு வழியே இல்லாமல் அவள் மருத்துமனைக்கு ஓடினாள். கையில் புதைத்து வைத்தீர்களே அந்தக் குழாய்களைப் பிய்த்துப் போடுங்கள் என்று கெஞ்சினாள்.

ஒவ்வொரு முறை ஒரு சாக்கு சொன்னார்கள்.

'ரத்தப் போக்கு கொஞ்ச கொஞ்சமா கொறஞ்சி போயிடும்மா',

'கவலைப்படாதே, சீக்கிரம் சரியாப் போகும், போய்வா',

'இன்னைக்கு டாக்டர் இல்லே, போயி அடுத்த வாரம் வா'

'என்னா அவசரப்படறியே, கொஞ்சம் பொறுத்துக்க'

'அடுத்த முறை வாம்மா, பாக்கலாம்' எட்டு முறை போய் வந்தாள். கடைசியில் அவளுக்கு பொறுமை எல்லை மீறி விட்டது. ஆஸ்பத்திரியிலேயே தற்கொலை செய்து கொள்ளப் போவதாக மிரட்டினாள். பயந்து போய் அசைந்து கொடுத்த டாக்டர்கள் அவள் கையில் மேற்பாகத்தில் சதைக்குள் புதைத்திருந்த குழாய்களை அகற்றி விட்டார்கள்.

○○○

அந்தப் பெண்ணுக்குப் போட்ட மருந்து ஹார்மோனல் - சுரப்பி மருந்து. பெயர் நார்பிளான்ட்; மெல்லிய பிளாஸ்டிக் குழாய்களில் மருந்து இருக்கும். அதை கையில் வைத்துப் புதைத்து விடுவார்கள். அதிலிருந்து மருந்து ஊறி ரத்தத்தில் கலக்கும். கருமுட்டை உருவாவதை மருந்து தடுத்து விடுகிறது.

### புதிய சாத்தான்!

நார்பிளான்டுக்குப் பிறகு நெட்-என், சைக்ளோஃபெம், அதை அடுத்து இப்போது டெபோபுரோவெரா வந்திருக்கிறது. நார்பிளான்ட் குழாய் மருந்து, டெபோபுரோவெரா ஹார்மோனல் (சுரப்பி) ஊசி மருந்து சுருக்கமாக, டெபோ (D.P) அமெரிக்காவில் உள்ள அப்ஜான் என்ற டாக்டரால் உருவாக்கப்பட்ட மருந்து. டெபோவின் இந்திய விற்பனையாளர்கள் மேக்ஸ்ஃபார்மா என்ற தரகுக் கம்பெனி.

டெபோ ஹார்மோன் ஊசியைப் போட்டால் 3 மாதங்களுக்கு மாதவிடாய் வராது. கரு உருவாகாது, அற்புத வித்தை என்கிறது கம்பெனி, ஆனால் இதனால் மார்பகப் புற்று நோய் வரும், எலும்பு வலிமை இழந்து மெலிந்து விடும், பொடிப் பொடியாகி விடும். திடீரென்று உடம்பு ஊதிப் போகும், 52 விதமான பக்க விளைவுகள் உண்டாகும். கம்பெனி இவற்றை மூடி மறைக்கின்றது என்று பெண் உரிமை அமைப்புகள் போராடுகின்றன.

கம்பெனியோ கடந்த 15 ஆண்டுகளாக 'எல்லாவழிகளிலும்' முயற்சி செய்து இந்தியச் சந்தையை பிடிக்க ஒற்றைக் காலில் நிற்கிறது. அவர்களைப் பொறுத்த வரை இந்தியப் பெண்கள் மனித உயிர்கள் அல்ல, சந்தை.

### எப்படி இயங்குகிறது?

வாசக்டமி, டூபக்டமி, ஆண் உறை போன்ற குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் பற்றி அறிந்திருப்பீர்கள், வாசக்டமி ஆணுக்கும், டூபக்டமி பெண்ணுக்கும் செய்யப்படும் அறுவைச் சிகிச்சை, விந்து வெளியேறும் குழாய், உள்ளே நுழையும் குழாய்கள் முறையே முடிச்சுப் போடப்படுகின்றன. டெபோவில் வேறு வித்தியாசமான முறை பின்பற்றப்படுகிறது. இதில் உள்ள மருந்து புரோஜெஸ்டோஜென் வகையைச் சேர்ந்தது. பெண்களின் உடலில் கரு உருவாக்கத்துக்குச் சில சுரப்பிகளும், புரதச் சத்துக்களும், அடிப்படையாக உதவுகின்றன. இவை உரிய அளவில் இருக்கும் போதுதான் முட்டைகள் பெண் உடலில் உருவாகின்றன. எதிராகச் செயல்படக் கூடிய எதிர் உயிரிகளை (ANTI-BODIES) உருவாக்குகிறது டெபோ. இதன் மூலம் முட்டைகள் உருவாக்கப்படாமல் தடுக்கப்படுகிறது.

> போதிய இடைவெளி கொடுத்து பிள்ளைபெற நினைக்கும் பெண்கள், பாலியல் அராசகக் கலாச்சாரத்திற்கு பலியான நடுத்தர வர்க்கத்தின் இளைய சமுதாயம் - ஆகியோர் 'டெபோ'விற்குப் பலியாக வாய்ப்பு உள்ளது.

பெண் பருவம் அடைந்த வயதில் உடல் இயக்கத்தில் கரு உருவாக்கத்துக்குப் பயன்படாத முட்டைகள் ஒவ்வொரு மாதமும் கழிவாக ரத்தப் போக்கோடு வெளியேற்றப்பட்டு வருகிறது, இது இயல்பானது, இயற்கையானது, இதுவே மாதவிடாய். ஆனால் ஒரு டெபோ மருந்து ஊசி, மாதவிடாய் வருவதை மூன்று மாதங்கள் நிறுத்திவிடும், இயற்கையான செயல்பாடு முடக்கப்படும். அதனால் உடற் கூறியல் அமைப்பில் பல விளைவுகள் ஏற்படுகின்றன அவை என்ன என்பதை டெபோ கம்பெனி சொல்லவில்லை. பேசாமல் மூடி மறைக்கிறது. இதுதான் பக்க விளைவுகளுக்குக் காரணம், இதைக் காரணம் காட்டிதான் டெபோவை பெண்கள் அமைப்புகள் எதிர்க்கிறார்கள்.

அவர்கள் எதிர்ப்பு தெரிவிப்பதற்கு முக்கியமான முதல் காரணமே பெண்களின் அடிப்படை உடல் நலத்துக்கே எதிரானது டெபோ என்பது தான், அதாவது சுரப்பிகளின் இயற்கை இயக்கத்தைத் தடுத்து விடுவதால், உடலில் உள்ள எலும்புகள் வலுவிழந்து போகின்றன. பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் எலும்பு மெலிகிறது, அல்லது எளிதில் சிறு காயத்திற்குக் கூடத் தாக்கு பிடிக்காமல் நொறுங்கிப் போகிறது. தலை சுற்றல், தலைவலி, மனநிலை பாதிப்பு, கர்ப்பப் பையின் சுய இயக்கம் கெட்டுப் போவதால் இடுப்புப் பகுதியில் கருப்பைக்கு வெளியே கரு உருவாவது (ECTOPIC PREGNANCY), அத்தனைக்கும் மேலாக மார்பகப் புற்றுநோய் ஆகியவை மற்ற பக்க விளைவுகளில் மிக மிக முக்கியமானவை.

### 30 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும்...

அப்ஜான் கம்பெனி பதில் சொல்ல முடியாது. காரணம், அமெரிக்காவில் விலங்குகள் மேல் டெபோவை பரிசோதித்துப் பார்த்த போதே பக்க விளைவுகள் வரும் என்பது நிரூபணமாகி விட்டது. பக்க விளைவுகளை மறைத்து விட்டுத்தான் 1977-லேயே டெபோவை இந்தியாவில் விற்க அது முயற்சி செய்திருக்கிறது. அமெரிக்காவிலேயே அதற்கு அப்போது எதிர்ப்பு இருந்ததால் அதுவே காரணமாகக் காட்டப்பட்டு டெபோ உள்ளே

www.padippakam.com

நுழைவது தவிர்க்கப்பட்டது. இப்போது டெபோ வருவது இரண்டாம் முறை. இப்போதும் இந்த ஐயங்களுக்கு கம்பெனியிடம் நியாயமான பதில் இல்லை.

மனிதர்கள் மீது அமெரிக்காவில் சோதித்த பிறகு கொண்டு வராமல் ஏன் இங்கு அந்தச் சோதனை நடத்தப்படுகிறது? தயாரிக்கப்பட்டு 30 ஆண்டுகள் ஆகிவிட்டன, 20 ஆண்டுகள் அங்கேயே எதிர்ப்புகள் இருந்தன, என்றால் ஒரு நூறு பேருக்காவது மாதிரிச் சோதனை நடத்தி டெபோவின் நம்பகத் தன்மையை நிரூபித்திருக்கலாமே, ஏன் செய்யவில்லை?

இந்திய அரசாங்கம் டெபோவின் நுழைவை அங்கீகரித்து விட்டது. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் கண் துடைப்புக்காக ஒரு சில சோதனைகளை மேற் கொண்டிருக்கிறதே தவிர இது பற்றி அறிவிப்பு ஏதும் கொடுக்கவும் இல்லை, இத்தனை நாடுகள் டெபோ பற்றி இன்ன இன்ன வகையில் கருத்து சொல்கிறார்கள், நாம் இங்கு ஆராய்ந்து சொல்ல இவ்வளவு வருடங்கள் பிடிக்கும். அதுவரை இந்த மருந்தை உள்ளே அனுமதிக்க கூடாது என்று முடிவாகச் சொல்லியிருக்க வேண்டும். அவ்வாறு அது அரசுக்கு சிபாரிசு செய்யவில்லை.

இந்த நிலையில், அப்ஜான் கம்பெனி முன் ஏற்பாடாகவே வெட்ட வேண்டிய இடத்தில் எல்லாம் லஞ்சம் வெட்டி விட்டது. 'அமெரிக்க பாதுகாப்பு மற்றும் பரிவர்த்தனை கமிஷன்' முன்பு எந்தெந்த நாடுகளில் டெபோ விற்பனைக்கு அனுப்பப்பட்டதோ அங்கெல்லாம் அரசு அதிகாரிகளுக்கு, அரசாங்க ஏஜென்சிகளுக்கு மொத்தம் 2.7 மில்லியன் டாலர் (சுமார் 9 கோடி ரூபாய்) லஞ்சம் கொடுத்துச் சரிக் கட்டியிருக்கிறேன் என்று அப்ஜான் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறது.

ஆனால் டெபோவுக்குக்கெதிராகப் பெண்கள் அமைப்புகள் தொடர்ந்து போராடி வருகின்றன. அவை வைத்த பல வாதங்களில் **முதலாவது**, குடும்பக் கட்டுப்பாடு சோதனைகள், மருந்துகள், ஆராய்ச்சிகள், ஏன் பெண்மீது. அதுவும் ஏழை நாட்டுப் பெண்கள் மீது அதிகம் நடத்தப்படுகின்றன?

அறுவைச் சிகிச்சை நீக்கிய ஆண்களுக்கான வாசக்டமி முறை வந்த பிறகு கூட பெண்களுக்கான டூபக்டமி தான் அதிகம் நடத்தப்படுகின்றது. இந்த நிலையில் ஹார்மோனல் ஊசிகளும் சேர்ந்து கொண்டிருக்கின்றன.

**இரண்டாவது**, அமெரிக்க நிலைமை வேறு, இந்திய நிலைமை வேறு. அங்கு தரப்படும் அதே டோஸ் (மருந்தின் அளவு) இங்கும் தரப்படுகிறது. அதாவது இங்கு தரப்பட வேண்டிய டோஸ் பற்றி குறிப்பான அறிவுரை இல்லாமல் மருந்து இந்தியாவிற்குள் தள்ளப்படுகிறது. இது தவறு.

**மூன்றாவது**, டெபோ அமெரிக்க சூழ்நிலையில் சோதனைச் சாலையிலும், முயல் - எலி போன்றவை மீதும் ஆராய்ந்து பார்க்கப்பட்டதே தவிர, அமெரிக்கப் பெண்கள் மீது மாதிரிச் சோதனை கூட செய்யப்படவில்லை. இந்திய விவசாயி மேல் பூச்சி மருந்து நேரடியாகத் தெளிக்கப்பட்டு அதன் விஷத் தன்மை சோதிக்கப்பட்டது போல டெபோவின் மூன்றாம் கட்ட சோதனை இந்தியப் பெண் மேல் நடத்தப்படுகிறது, இது மனித உரிமை மீறும் கிரிமினல் குற்றம்.

**நான்காவதாக**, டெபோ போன்ற ஹார்மோனல் சுரப்பி ஊசிகள் போடப்படுகின்ற பெண்களை பல வருடங்கள் தொடர்ந்து கண் காணித்துக் கவனிக்க வேண்டும். இதற்கான வசதி, - வாய்ப்பு இங்கு இல்லை.

**ஐந்தாவதாக**, இங்கிலாந்தில் டெபோ மனநலம் குறைந்தவர்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா பாதுகாப்போடும் கொடுக்க வேண்டும், என்று விதி உள்ளது. ஜெர்மனியிலும் குறைந்த அளவே பயன்படுத்தப் படவேண்டும் என்று வரை முறை உள்ளது. இந்தக் கட்டுப்பாடுகள் இங்கு இல்லை.

இதில் எந்த வாதங்களுக்குமே கம்பெனி பதில் சொல்லவில்லை. இந்திய அரசாங்கமும் பதில் சொல்லவில்லை. அப்ஜானின் இந்தியத் தரகுக் கம்பெனி மேக்ஸ்ஃபார்மா "டெபோவை எடுத்துக் கொள்ளுங்கள் என்று யாரும் யாரையும் நிர்ப்பந்தம் செய்யவில்லை எல்லா பக்க



படிப்பகம்

மாக்ஸ் ஃபார்மா அலுவலகத்தினுள் புகுந்து பெண் உரிமை இயக்கத்தினர் ஆர்ப்பாட்டம்!

www.padippakam.com

விளைவுகள் பற்றியும் எல்லாருக்கும் சொல்லி விட்டுத்தான் விற்போம்'' என்று சொல்கிறது. சிகரெட் விற்பவன் அதைத் தான் சொல்கிறான். அப்படியானால் அபாயம் என்று எழுதி ஒட்டிவிட்டு போதை மருந்துகளை விற்கலாமா? உலகம் முழுவதும் எதற்காக சட்டம், தண்டனை வைக்கிறார்கள்? பக்க விளைவுகளையும் சொல்லிவிட்டு விற்கிறேன் என்றால், விஷம் என்று சொல்லி விற்கிறேன், மீறி வாங்குபவன் சாகட்டுமே என்று தான் பொருளா?

மூன்று மாதம் பலன் தரும் ஒரு ஊசி விலை ரூ. 124/-, வருடத்துக்கு சுமார் ரூ. 500/- தான். தலைவலி மாத்திரை அல்ல, போட்டதுமே போயே போச்சு என்று சொல்லுவதற்கு. ஊசி போட்டால் தொடர்ந்து பரிசோதித்து மருத்துவரின் ஆலோசனையில் இருக்க வேண்டும். இங்குள்ள பொது மருத்துவ தரத்தில் இது சாத்தியமில்லை.

மிகப் பெரிய அளவில் இந்தியாவில் கோடிக் கணக்கான மக்களுக்கும் செய்ய வேண்டுமென்றால், அரசுக்கு கருத்தடை செய்வதே நோக்கமாக இருந்தாலும், விலை காரணமாகச் சாத்தியம் இல்லை. இருந்தாலும் அமெரிக்க மாமாக்களிடம் இந்தியமாமாக்கள் காசு வாங்கிக் கொண்டு பெரிய அளவில் உள்ளே நுழைக்கவும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் கம்பெனியின் இலக்கு தற்போதைக்கு மத்தியதரவர்க்கம்.

ㅇㅇㅇ

மத்தியதரவர்க்கம் இப்போது முன் எப்போதும் இருந்திராத அளவுக்கு மூச்சு முட்ட மேற்கத்திய கலாச்சார நெடியில் திளைக்கிறது. இதன் விளைவுகள் ஒரு போக்காகவே வளர்ந்து வருகின்றன. குமுதம், ஜூன் 94 இதழ் ('படிக்கும் போதே செக்ஸா?') மற்றும் ஆங்கில ஏடுகளில் இவை விவாதிக்கப்படுகின்றன.

நகர்ப்புற டாக்டர்கள் தங்களிடம் பெண்ணும் பையனும் பள்ளிக் கூடச் சீருடையோடு கூட கருக் கலைப்புக்கு வருகிறார்கள் என்று அதிர்ச்சியோடு சொல்கிறார்கள். ஒரு முறை டி அண்டு சி சுத்தம் செய்து கொண்ட ஒரு சிறுமி 'அட இவ்வளவு ஈஸியானதா' என்று கேட்டாளாம், பிறகு கருவாங்கி கொள்வது, கலைப்பது, அப்படிப்பட்டவர்களுக்கு சர்வ சாதாரணமாகி விடுகிறது. டிஸ்கோ நடனசாலைகளுக்குப் போவது, 'நண்பர்களோடு சேர்ந்து படிக்கிறேன்' 'ஞாயிறு ஸ்பெஷல் கிளாஸ்' என்று பொய் சொல்லிவிட்டு வெளியே தங்குவது, ஓட்டல்களில் அறை எடுத்து ஜாலியாக இருப்பது வளர்ந்து வரும் நாகரீகமாகி விட்டது. இந்த நாகரீகத்தில் திளைக்கும் நபர்களுக்கு டெபோ மருந்து அவசரத் தேவைக்கு அகப்படும் மருந்தாகி விடும்.

> 'டெபோ' மருந்து
> மாதவிடாயை மூன்று
> மாதங்களுக்கு
> நிறுத்திவிடும். சுரப்பிகளின்
> இயற்கையான இயக்கத்தை
> தடுத்து விடுவதால்
> எலும்புகள் வலுவிழப்பது,
> மார்பகப் புற்று நோய்
> போன்ற மோசமான
> பக்க விளைவுகள் ஏற்படும்.

இவர்கள் தவிர போதிய இடைவெளி கொடுத்துப் பிள்ளை பெற நினைப்பவர்கள் ஏதாவது ஒரு வகையில் குடும்பக் கட்டுப்பாட்டைச் செய்ய யோசிக்கிறார்கள். நகர்ப்புற, சிறுநகர்ப்புற மத்திய தரவர்க்க குடும்பங்கள் இப்படிச் சிந்திக்கின்றன. ஓரிரு ஆண்டுகள் தள்ளி இரண்டாவது குழந்தை பெற நினைக்கின்ற பெண் எளிதான கஷ்டமில்லாத கட்டுப்பாட்டு முறை இருக்காதா என்று எதிர்பார்க்கிறாள். இது இயல்பு தான். இவர்களுக்கும் டெபோ மருந்து தேவைக்கு கிடைத்துவிடும்.

சட்டபூர்வமாக டெபோ இந்தியாவுக்குள் வரவில்லையே தவிர நேபாளத்திலிருந்து உள்ளே வருகிறது என்று சொல்கிறார்கள். சட்டபூர்வமாக அனுமதி தருவதற்கு இதையும் ஒரு காரணமாக அரசு சேர்த்தாலும் சேர்க்கும். கடைசியாக டி.பி. உறையின் மேல் 'எச்சரிக்கை: பக்க விளைவுகள்' என்ற அறிவிப்பு பொடி எழுத்தில் 'எச்சரிக்கை பக்க விளைவுகள்' என அச்சிடப்பட்டு அனுமதிக்கப்படலாம், ஏராளமான விளம்பரங்கள் கூட வைக்கப்படலாம்.

டெபோ எந்த ஒரு சமூகச் சூழலில் உள்ளே நுழைகிறது என்பதைப் புரிந்து கொண்டால் பெண்ணுக்கு எவ்வளவு கடுமையான தீய விளைவுகள் நேரும் என்பதைத் தீர்மானித்து விடலாம். ஒரு புறம் ஆண் ஆதிக்கம், கருவைத் தரிப்பது பெண், தடுத்துக் கொள்ளும் வேலையும் அவளுக்குத் தான் என்று ஆண் இருப்பது ஆண் ஆதிக்கம்.

பாலுறவு அராசகம் ஒரு கலாச்சாரமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. இது மறு பக்கம். இதிலும் பிரச்சனையைத் தாங்குவது பெண்தான். கரு கொடுத்து விட்டுக் கலைப்பதற்கு பெண்ணை மருத்துவரிடம் அழைத்துச் செல்லும் ஆண், மருத்துவரிடம் என்ன சொல்கிறான்? "இது என் அத்தை மகள், அவள் நண்பர்களோடு பார்ட்டிக்குப் போய் வந்தாள், போன இடத்தில் ஏதோ தவறாக நடந்து விட்டதாய் [illegible] ஒரு பொய் நாடகமாடுவதற்கு தான் போடும் வேஷத்தோடு பொறுப்பு முடிந்து போய் விட்டதாக ஆண் கருதுகிறான். பொறுப்பின்மை, கோழைத்தனம், விட்டேத்தியான விடலைத்தனம், எல்லாம் சேர்ந்து மொத்த உரு அந்த ஆண். இதுதான் இங்கே பெண்ணோடு ஆணுக்கு உள்ள உறவுநிலை.

இங்கு தான் டெபோ வரப் போகிறது. டெபோவின் விளைவால் முடமாக்கப்படப் போவது பெண்.

ㅇㅇㅇ

அமெரிக்க ஏகபோக முதலாளிகளுக்கு சமூகப் பொறுப்புணர்வு என்றும், இருந்தது கிடையாது. புற்று நோய் உருவாகும் என்று தெரிந்தும் ஒரு மருந்தை விற்கின்ற அப்ஜான் கம்பனியிடம் அந்த பொறுப்புணர்வை எதிர்பார்க்க முடியாது.

உலகெங்கும் அறியப்பட்டுள்ள ஓமியோபதி மருத்துவத்தின் தந்தை டாக்டர் ஹனிமன், இவர் தான் கண்டு பிடித்த ஒவ்வொரு புதிய மருந்தையும் தன் மீதும் தன் குடும்பத்தினர் மீதும் பரிசோதித்த பிறகே மற்றவர்களுக்கு அளித்தார். அந்த காலத்தில் இருந்த சமூக நிலைமையில் மற்றவர் மீது பரிசோதித்துப் பார்த்திருந்தாலும் பெரிதாக எடுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆனால் அவர் அப்படி செய்யாது தன் மீதே பரிசோதித்து கொண்டார். இதுவே ஒரு சரியான மருத்துவரின் பொறுப்புணர்வு.

இந்தியா முழுவதும், டெபோவை எதிர்த்தாலும், அமெரிக்கா அதே மருந்தை ஏதாவதொரு காரணம் சொல்லி நம்மீது திணித்துவிடும். அண்மையில் அமெரிக்க அரசோடு இந்தியா செய்துள்ள காட் (GATT) ஒப்பந்தம் அதற்குத் துணைபோகும்.

உலகமெங்கும் போரைத் தூண்டி ஆயுதம் விற்று சாவு வியாபாரம் செய்யும் அமெரிக்கா உலக மக்கள் தொகை அதிகரிப்பில் கரிசனம் இருப்பது போலக் காட்டுகிறது. பொருள் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது போலவே, எதிர்கால சந்தையை ஏதாவதொரு விதத்தில் பாதிக்கும் என்று காரணம் காட்டி மனித உற்பத்தியிலும் கட்டுப்பாடு கொண்டு வரும், அதற்காக டெபோ போன்ற ஹார்மோனல் ஊசி மருந்துகளையும் திணித்து விடும்.

மனித உரிமை, உயிர்வாழும் உரிமை பறிக்கப்படுகிறது என்று சொல்லி நாம் டெபோவை எதிர்த்தால் வர்த்தக உரிமை பறி போவதாக அவன் முறையிடுவான், ஏனென்றால் அவனது வர்த்தக உரிமை, 'காட்' (GATT) ன் கீழ் உறுதி செய்யப்பட்டிருக்கிறது! நமது உயிர்வாழும் உரிமையோ 'காட்'-டால் பறிக்கப் பட்டிருக்கிறது!

● புதூர் இராசவேல்

படிப்பகம்

www.padippakam.com

# போலி மார்க்சிஸ்டுகளின் வேத உபதேசம் 2

### ஆரியப் படையெடுப்பும் நம்பூதிரியின் நயவஞ்சகமும்

பார்ப்பன சனாதன - இந்துமத வெறி பாசிசத்தை நேரடியாக பிரதிநிதித்துவப்படுத்தும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களைவிட, உண்மையில் போலி மார்க்சிஸ்டுகள்தாம் மிகவும் அபாயகரமானவர்கள் என்று கடந்த ''புதிய கலாச்சார''த்தில் குறிப்பிட்டிருந்தோம். ஏனென்றால் இவர்கள் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களைப் போல பகிரங்கமான முறையில் பார்ப்பனீயத்தையும், பார்ப்பன ஆதிக்கத்தையும் காப்பதற்காகக் களத்தில் வந்து நிற்பதில்லை. மாறாக கம்யூனிசத்தின் பேரால் பாட்டாளி வர்க்க இயக்கத்துக்குள் புகுந்து கொண்டு நயவஞ்சகம் துரோகம், தத்துவ - வரலாற்றுப் புரட்டு ஆகிய மறைமுக வழிகளில் இதைச் செய்கிறார்கள்.

ஆரியர்களின் ஆக்கிரமிப்பு; அதற்கு முன்பு இந்த துணைக்கண்டத்தில் நிலவிய சமூக அமைப்பு அதன் பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சி; ஆரியர்கள் உருவாக்கிய பார்ப்பன சனாதன மதம், வருண - சாதி அமைப்பு; அதற்கு எதிராக புத்த - சமண மதங்கள், ஒடுக்கப்பட்ட வருண - சாதி எழுச்சிகள், அவற்றை அடக்குவதற்கு பார்ப்பனீய ஆதிக்க சக்திகள் மேற்கொண்ட அட்டூழியங்கள்; பார்ப்பன சனாதன மதமே அனைத்து மக்களின் ''இந்து'' மதமென்று ஆதிசங்கரன் முதலியோர் செய்த பித்தலாட்டங்கள்; அதன் தொடர்ச்சியாக ''இந்துத்துவம்'' தான் இந்தியப் பண்பாடு - தேசியம் என்கிற பெயரில் நடக்கும் பாசிச மோசடி ஆகிய அனைத்திலும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களின் நிலைப்பாடுகளுக்கு இசைவான கண்ணோட்டத்தையே தமது மார்க்சிய வரலாற்று ஆய்வுகள் என்கிற பெயரில் சி.பி.எம்.மின் சித்தாந்த குரு சங்கரன் நம்பூதிரியும் அவரது சீடர்களும் முன் வைக்கிறார்கள்.

ஆரியர்கள் இந்த நாட்டின் பூர்வகுடிகள் அல்ல. மத்திய ஆசியாவில் இருந்து அதிக பட்சம் போனால் நான்காயிரம் ஆண்டுகளுக்குள்ளாக இந்தியத் துணைக் கண்டத்துக்கு வந்தேறிய நாடோடிகளின் கூட்டம். அவர்களின் வருகைக்கு முன்பு இங்கு திராவிடர்கள், முண்டாக்கள், நாகர்கள் என்று வேறுபிற பூர்வகுடியினர் வாழ்ந்துவந்தனர். அவர்களில், குறிப்பாக திராவிடர்கள், ஆரியர்களைக் காட்டிலும் பன்மடங்கு வளர்ச்சியுற்ற உற்பத்திமுறையையும், நாகரிகம், பண்பாட்டையும் கொண்டிருந்தனர்.

இது பாகிஸ்தானில் உள்ள மொகஞ்சதரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் நடந்த அகழ்வாராய்ச்சிக் கண்டுபிடிப்புகளால் அறியப்படும் ''சிந்து சமவெளி நாகரிகம்'' மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இது நகர நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்ட அடிமைச் சமூதாயத்தின் ஆரம்ப நிலையில் இருந்தது; அப்போது தோன்றியிருந்த சமூக அமைப்பின் காரணமாக பெரும்பான்மையான மக்கள் நிராயுதபாணிகளாக்கப்பட்டு, சிறு அளவிலான, நிரந்தரமான நகரப்படைகளே இருந்தன.

இப்படிப்பட்ட சமூக அமைப்புகளின் மீது அவற்றைக் காட்டிலும் பின்தங்கிய சமூக குழுக்கள் தாக்குதல் தொடுத்து வெற்றி கொள்வது வரலாற்றில் ஒன்றும் புதிதல்ல. அடிமைச் சமூதாய அமைப்பின் உச்சநிலையில் இருந்த கிரேக்கத்தையும், ரோமாபுரியையும், ஜெர்மானிய காட்டுமிராண்டிச் சமூதாயத்தினர் தாக்கி ஒடுக்கவும் ஆக்கிரமிக்கவும் முடிந்தது இதற்குச் சான்றாகும். அதேபோல ஆரியர்கள் உற்பத்திமுறை, நாகரிகம் - பண்பாடு ஆகியவற்றில் பின்தங்கியிருந்தாலும், எதிரிகளைத் தாக்கி அழிக்கவும், தப்பி ஓடவும் தேவையான விரைந்து செல்லும் குதிரைகள், ரதங்கள், கனரகப் பொருட்களை ஏற்றிச் செல்லும் காளை வண்டிகள் ஆகியவற்றைப் பெற்றிருந்ததோடு பெண்கள் உள்ளிட்ட அவர்களது நாடோடிக் கூட்டம் முழுவதுமே ஆயுதபாணியாக இருந்தது; இதன் காரணமாக இந்தியப் பூர்வகுடி சமூகங்களின் மீது அலை அலையாகப் படையெடுத்து தாக்குதல்கள் நடத்தி முதலில் சிந்து, பிறகு கங்கை சமவெளிகளை ஆரியர்கள ஆக்கிரமித்தனர். அவர்கள் வென்றடக்கிய இந்தியப் பூர்வகுடியினரை ''தாசர்கள்'' - அடிமை

களாக்கினார்.

இவை எல்லாம் வரலாற்று வல்லுநர்களால் பல ஆண்டுகளுக்கு முன்பே ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்ட உண்மைகள். ஆனால் ஆரிய இனவெறியும், நிறவெறியும் பிடித்த ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் மேற்கண்ட வரலாற்று உண்மைகளை ஏற்பதில்லை. அவர்கள் 1960 வரை ஒரு விதமாக வாதித்து வந்தனர். அதன்படி ''ஆரியர்கள் கிழக்கு ஐரோப்பாவில் இருந்து உலகம் முழுவதும் குடியேறிய வெள்ளை நிற, இன பூர்வ குடிமக்கள்; அவர்கள் மிகவும் முன்னேறிய உற்பத்தி முறை, நாகரிகம் - பண்பாடு ஆகியவற்றைக் கொண்டிருந்ததால், காட்டு மிராண்டிகளாக வாழ்ந்த இந்தியப் பூர்வகுடி இனத்தவரை வென்றடக்கவும், தமது வளர்ந்த சமூக அமைப்பை நிலைநாட்டவும் முடிந்தது''. ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களின் சித்தாந்த குருக்களுடைய நூல்களில் ''இந்துத்துவ'', ''இந்துராஷ்டிர'' கோட்பாடு இந்த அடிப்படையில் தான் அமைந்துள்ளது.

ஆனால் சமீப ஆண்டுகளில், இந்த நாட்டின் மீது முழு முதல் உரிமை கொண்டாடுவதற்காக ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் வேறொரு வாதம் புரிகின்றனர். இதன்படி, ''ஆரியர்களும் இந்த நாட்டின் பூர்வகுடிகள் தாம்; வந்தேறிகள் அல்ல. 'ஆரியர்கள்' என்கிற சொல் கல்வி கேள்விகள், ஒழுக்கத்தில் சிறந்த மேன்மக்கள் என்பதையே குறிக்கிறது. தனி பூர்வகுடி (RACE) யை அல்ல. சிந்து சமவெளி நாகரிகத்தைப் படைத்தவர்கள் ஆரியர்களே. சிந்து என்பது திரிந்து அந்நியர்களால் இந்து என்றழைக்கப்படுகிறது. இந்துக்கள் என்றழைக்கப்பட்ட இவர்கள் உருவாக்கிய வேதங்களை அடிப்படையாகக் கொண்ட நாகரிகம் - கலாச்சாரமே இந்தியக் கலாச்சாரம்'' என்கின்றனர். இவ்வாறு இந்த மண்ணுக்கும், நாட்டுக்கும் ஆர்.எஸ்.எஸ். - பார்ப்பனர்கள் முழுமுதல் உரிமை கொண்டாடுகின்றனர். ''அதன்மூலம் இசுலாமியரும் கிறித்தவரும் அந்நிய மண்ணைப் புனிதமாகக் கருதுபவர்கள்; இந்தநாட்டின் மீது விசுவாசம் வைப்பவர்கள் அல்ல. ஆகவே, அவர்களைக் கொன்றொக்க வேண்டும், வென்றடக்க வேண்டும், அல்லது துரத்தியடிக்க வேண்டும்'' என்கிற ''இந்துத்துவ''க் கோட்பாட்டுக்குப் பொருத்தமாக வைக்கப்பட்டதே இந்த இரண்டாவது வாதம். அயோத்தி பாபரி மசூதியானது ராமன் கோவிலை இடித்துக் கட்டப்பட்டதுதான் என்று நிரூபிக்குமாறு தனது அகழ்வாய்வு மற்றும் வரலாற்று வல்லுநர்களை முடுக்கி விட்டதைப் போலவே இந்த வாதத்துக்கும் ஆதாரங்களை உருவாக்குமாறு இப்போது ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் சிலரைப் பணித்துள்ளார்கள்.

### ஆர்.எஸ்.எஸ்.ஸின் குருநாதராக பி. ராமமூர்த்தி!

ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களின் மேற்கண்ட இரண்டு · வாதங்களுக்கும் மாறிமாறி வலுச்சேர்க்கும் இனப்பாசத்தோடு, சி.பி.எம். கட்சியின் சித்தாந்தக் குருமார்கள் நடந்து கொள்கின்றனர். காலத்துக்கும் இடத்திற்கும் பொருத்தமான முறையில் எழுதுவதன் மூலம் இதைச் செய்கின்றனர்.

''ஆரியப்படையெடுப்பு- ஆக்கிர



படிப்பகம்

www.padippakam.com

மிப்பு'' குறித்து முன்பு நாம் தொகுத்தளித்த முடிவுகள் நமது நாட்டு மற்றும் மேலை நாட்டு வரலாற்று வல்லுநர்கள் மட்டுமல்ல, இந்தப் போலி மார்க்சிஸ்டுகள் ஏற்றுக்கொண்டுள்ள ''சோவியத் ஒன்றிய'' ஆய்வாளர்களும் நிரூபித்துள்ளவைதாம். ஆனால் மாண்டுபோன கம்யூனிச துரோகி பி. ராமமூர்த்தி இது குறித்து பின்வருமாறு எழுதியுள்ளார்.

''ஆரியர்கள் என்று பெயர் கொண்டு எந்தக் கூட்டத்தினரும் வேறு நாடுகளிலிருந்து இந்தியாவுக்குள் நுழைந்தார்கள் என்று சொல்வதற்கு வரலாற்று ஆதாரம் கிடையாது. அதனால் தான் அந்த ஆரியர்கள் என்பவர்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள்? என்பதைப் பற்றி நடத்திய ஆராய்ச்சிகளில் ஒரு முடிவுக்கும் வர இயலவில்லை.

வர்ணாசிரம தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட பிராமணீய மதத்தை உண்டாக்கியவர்கள் பிறப்பினால் மேல் சாதி, கீழ் சாதி என்ற பாகுபாட்டை ஏற்படுத்தியபோது, அதை நிலைநாட்டுவதற்காக பிராமண, க்ஷத்திரிய, வைசிய ஜாதியினரை 'ஆரியர்' என்று சொல்லிக் கொண்டார்கள். 'ஆரியர்' என்பது ஒரு சமஸ்கிருதச் சொல். அதன் பொருள் 'மேலோன்' என்பதாகும். மக்கள் பேசி வந்த பிராக்ருதம் பைசாசி, பாலி முதலிய மொழிகளில் 'ஆரியர்' என்ற சொல் கிடையாது. காளிதாசன் எழுதிய சாகுந்தலத்தில் யஜமானுடைய குடும்பத்தினரிடம் உரையாடுவதைக் காணலாம். யஜமானுடைய மகனை அவன் 'ஐயா அத்தா' என்று அழைப்பதைக் காணலாம். அதாவது இது 'ஆரிய புத்ரர்' என்ற சமஸ்கிருதச் சொல்லின் பிராக்ருதச் சொல். தமிழ்நாட்டிலும் 'ஐயா' என்ற அழைக்கும் பழக்கமுள்ளதைக் காணலாம், தன்னைக் காட்டிலும் மேலோன் என்பது அதன் பொருள்'' (பி. ராமமூர்த்தியின் ''ஆரிய மாயையா? திராவிட மாயையா?'' விடுதலைப் போரும் திராவிட இயக்கமும், பக்-256)

'ஆரியர்' என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு 'மேலோன்' என்று பொருளாம். இருக்கட்டுமே, அதனால் ஆரியர்கள் என்கிற பூர்வகுடி இனம், மத்திய ஆசியாவில் இருந்து வந்து குடியேறியது என்பது எப்படித் தவறாகிவிடும்! அப்படி வந்தவர்கள் தாம் ஆரியர்கள் என்பது மாந்தவியல் அகழ்வாய்வு மற்றும் மொழி ஆய்வுகளைக் கொண்டு அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, சி.பி.எம். கட்சியின் சித்தாந்த தலைமைக் குரு சங்கரன் நம்பூதிரி மேலும் ''திறமை''யாகத் திரித்துப் புரட்டி பின் வருமாறு எழுதுகிறார்:

**நம்பூதிரிபாடின் கண்டுபிடிப்புகள்!**

'ஆரியர்கள், திராவிடர்கள் என்ற இரண்டு மனித வம்சாவழியினர் மட்டும் தான் இருந்தனர் என்பதும் முதல் பகுதியினர் இரண்டாவது பகுதியினரை ஆக்கிரமித்து ஆதிக்கம் பெற்றனர் என்ற கருத்தும் ஆதாரமற்றது என்று இந்த அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இந்தியாவுக்குள் நுழைந்து வந்தவர்கள் ஆரியர்கள் என்ற ஒரே மனித வம்சத்தினர் அல்ல. அவர்களிலேயே பல்வேறு கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் இருந்தனர். வாழ வழிதேடி ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லவும் புதிய இடங்களில் உள்ளவர்கள் மீது ஆதிக்கம் பெறவும் முயற்சித்தவர்கள் பல்வேறு கோத்திரங்களைச் சார்ந்தவர்களாக இருந்தனர். அவர்களுக்குள்ளேயே பல நேரங்களில் மோதல்கள் ஏற்பட்டுள்ளன. அவர்களது ஆக்கிரமிப்புகளுக்கு இரையான பிரதேசங்களைச் சார்ந்தவர்களும் பல்வேறு கோத்திரங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இவ்வாறு கோத்திர - வர்க்க சமூகம் வீழ்ச்சியடையும் நிகழ்ச்சிப் போக்குகளுக்கிடையில் குடியிருப்பதற்கான இடம், ஆடு மாடுகளை மேய்ப்பதற்கான வசதி, உணவுப் பொருட்களை



சேகரிப்பது, உற்பத்தி செய்வது ஆகிய பிரச்சினைகளிலும் பரஸ்பரம் மோதிக் கொண்டிருந்த பல்வேறு மக்கட் பகுதியினரில் ஒரு பிரிவினருக்குத் தான் 'ஆரியர்கள்' என்ற பெயர் கிடைத்துள்ளது''.

''இந்தப் பெயர் அவர்களுக்குக் கிடைத்ததற்காக காரணங்குறித்து சில அறிஞர்களின் கருத்து இதுதான்: சமுதாயத்தில் மெல்ல மெல்ல ஏற்பட்டு வந்த வளர்ச்சி ஒரு பிரிவினரை மற்றவர்களைக் காட்டிலும் உயர்வான கலாச்சார நிலைக்கு இட்டுச் சென்றது. அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் உயர்வான ஒரு மொழியை உருவாக்கினர். இவ்வாறு ஒரு உன்னதநிலையை அடைந்த மொழி 'ஆரிய மொழி' என்று அறியப்படத் தொடங்கியது. இதுதான் பின்னர் சமஸ்கிருத மொழியாக வளர்ச்சியடைந்தது''.

''இந்த மொழியைப் பயன்படுத்திய, முன்னேறிய பகுதியினர் பல்வேறு கோத்திரங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அதாவது 'ஆரியர்கள்' என்கிற ஒரு மனித வம்சத்தைச் சேர்ந்தவர்களல்ல. பல்வேறு வம்சாவழியினரில் ஒரு சிறுபிரிவினர் அடைந்த முன்னேற்றத்தைக் குறிக்கிற 'ஆரியமொழி'யை உருவாக்கி அதனைப் பயன்படுத்தி ரிக்வேதம் முதலிய நூல்களை இயற்றவும் செய்தவர்கள் 'ஆரியர்கள்' ஆனார்கள்.

ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களின் நிலைப்பாட்டுக்கு வலு சேர்ப்பதற்காகவே, சங்கரன் நம்பூதிரி தனக்கேயுரிய தந்திரமான முறையில் வாதங்களை முறுக்கி, மழுப்பி, புரட்டிப்புரட்டி வைப்பதை இதில் காணலாம். முதலில் ''ஆரியர்களின் வருகை'' என்று குறிப்பிடுகிறார்; பிறகு, இந்தியாவுக்குள் நுழைந்து வந்தவர்கள் ஆரியர்கள் என்ற ஒரே மனித வம்சத்தினர் அல்ல என்கிறார்; அப்படி என்றால் ஆரியர்கள் தவிர வேறு மனித வம்சத்தினர்களும் வந்தார்களா? அவர்கள் எந்தெந்த வம்சாவழியினர்? என்ற கேள்விகளும் எழுகின்றன. இதற்குப் பதில் சொல்வதற்குப்பதில் பல்வேறு கோத்திரங்களைச் சேர்ந்தவர்களும் இந்தியாவுக்குள் நுழைந்து வந்தார்கள் என்கிறார். பல்வேறு கோத்திரங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தால் என்ன? அவை எல்லாம் ஒரே வம்சாவழியை பூர்வகுடி இனத்தை சேர்ந்ததாக ஏன் இருக்கக்கூடாது? ஒரே வம்சாவழிக்குள் பல கோத்திரங்கள் இருப்பது சமூகங்களின் வரலாற்றில் எங்கும் காண்பதுதானே? இது எப்படி ஆரியர்களின் படையெடுப்பை மறுப்பதாகும்? மேற்கண்ட வாதங்கள் மூலம் ஆரியப்படையெடுப்பையும் ஆக்கிரமிப்பையும் ஆதாரமற்றது என்று நிராகரிக்கிறார், சங்கரன் நம்பூதிரி.

வெளியிலிருந்து குடியேறிய பல்வேறு மனித வம்சாவழியினர் (பூர்வ குடியினர்), இங்கேயே இருந்த பல்வேறு வம்சாவழியினர் (பூர்வகுடியினர்) இந்த எல்லா பூர்வகுடியினங்களின் பல்வேறு கோத்திரங்களை சேர்ந்த பல்வேறு மக்கள் பிரிவினருக்குள் பல்வேறு பிரச்சினைகளுக்காக நடந்த மோதல்கள் - என்னும் நிகழ்ச்சிப் போக்கில் உயர்வான கலாச்சார நிலையை எட்டிய, உன்னதமான சமஸ்கிருத மொழியையும், அதில் வேதங்கள் முதலிய நூல்களையும் படைத்த ஒரு பிரிவு மக்கள்தான் ''ஆரியர்கள்'' என்று ஒரு வரையறுப்பும் தருகிறார், சங்கரன் நம்பூதிரி.

இப்படி இந்தியாவிலேயே உருவாகிய ஆரியர்கள், சிந்து கலாச்சாரத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து உருவான சூனிய நிலையில் அப்பிரதேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டனர்; அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புக்கு ''இரையானவர்களை'' தாசர்களாக - அடிமைகளாக்கியும் தாமே ஆண்டைகளாகியும் ஒரு புதிய சமூக அமைப்பை உருவாக்கினார்கள் என்கிறார் சங்கரன் நம்பூதிரி.

இதன் மூலம் பின்வரும் முடிவுக்கு

படிப்பகம்

www.padippakam.com

வருகிறார்: ஆரிய ஆக்கிரமிப்புக்கு முன்பு வட இந்தியாவில் இருந்தது புராதனப் பொதுவுடைமைச் சமுதாயத்தின் வடிவிலான கோத்திர வர்க்க சமூகம்; அதைத் தகர்த்து வருண அடிப்படையிலான அடிமைச் சமூகத்தை உருவாக்கிய தன் மூலம் ஆரியர்கள் முற்போக்கு பாத்திரமாற்றினர்; பின்தங்கிய சமூக அமைப்பும், கலாச்சார சூன்ய நிலையும் நிலவிய போது, அதைவிட முன்னேறிய சமூக அமைப்பையும், கலாச்சாரத்தையும் ஆரியர்கள் உருவாக்கினர். ஆனால் தென்னிந்தியாவில் இந்த நிகழ்ச்சிப்போக்கு ஆரிய ஆக்கிரமிப்பால் நடக்கவில்லை; திராவிட பூர்வகுடி இனத்தினராலேயே ஏற்பட்டது என்கிறார் சங்கரன் நம்பூதிரி. ஆக, ஆரியப்படையெடுப்பு - ஆக்கிரமிப்பு, ஆரிய - திராவிடப் போர்கள் ஆகிய அனைத்தும் ஆதாரமற்ற முடிவுகள் என்று நிராகரிக்கிறார்.

### வரலாற்றுப் புரட்டின் நோக்கம் என்ன?

இந்தியத் துணைக் கண்டத்துப் பூர்வகுடி இனங்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பு அழிவு வேலைகள் செய்து, தனது இன ஆதிக்க சமூக - மத அமைப்பை உருவாக்கியது மட்டுமல்ல, அவற்றுக்கான பாரம்பரியப் பெருமை பாராட்டி, மீண்டும் உயிர்ப்பிக்கவும், இனவெறி - நிறவெறி பாசிசத்தை நிலைநாட்டவும் முயலுகின்றனர், 'ஆரிய இன வாரிசுகள்'. அவர்கள்மீது இந்த நாட்டு மக்கள் நியாயமான வெறுப்பும் கோபமும் கொண்டிருக்கின்றனர். இதை மழுங்கடிக்கும் நோக்கத்துடன் புனையப்பட்டது தான் சங்கரன் நம்பூதிரியின் வரலாற்று ஆய்வு முடிவுகள். ஆரியர்கள் இந்த மண்ணுக்குச் சொந்தக் காரர்கள்; இந்த நாட்டின் கலாச்சார தத்துவ - மத வாழ்வுக்கும் முன்னேற்றத்துக்கும் காரணமானவர்கள் என்பதே அவரின் வாதங்கள். ஆனால், இதற்கான ஆதாரங்கள், ஆய்வுகள் எதுவும் அவர் முன்வைக்கவில்லை. வெறும் கோட்பாடுகளும், முடிவுகளும் மட்டுமே எழுதியுள்ளார்.

ஆனால் சங்கரன் நம்பூதிரியின் மலையாள ஆராய்ச்சி முடிவுகளுக்கும் கோட்பாடுகளுக்கும் தமிழில் மொழிபெயர்ப்பும், பாஷ்யமும் (பொழிப்புரைகளும்) எழுதும் 'குட்டி சித்தாந்த குரு' பி.ஆர்.பரமேசுவரன், தமிழ்நாட்டில் நிலவும் பார்ப்பனீய எதிர்ப்பு நிலைமைகளுக்குப் பொருத்தமாக பின்வருமாறு எழுதுகிறார்.

### பரமேசுவரனின் பித்தலாட்டம்!

"ஆரியர்கள் மத்திய ஆசியாவை பூர்வீகமாகக் கொண்டவர்கள். குறிப்பாக சொல்வதென்றால் இன்றைய உஸ்பெகிஸ்தான் என்று கூறுகிறார் டி.டி. கோசாம்பி" ('மார்க்சிஸ்ட்' மாத இதழ் நவ. 1990 பி.ஆர். பரமேசுவரன், பக். 35-36). "இந்தியாவுள் நுழைந்த ஆரியர்களும் இங்கிருந்த பூர்வகுடி மக்களுடன் நீண்டகாலம் யுத்தம் செய்து இறுதியில் அவர்கள் மீது வெற்றி பெற்றனர். உண்மையில் இந்திய உபகண்டத்தை ஆக்கிரமித்த முதல் அன்னியர்கள் ஆரியர்கள்தான்". (மேற்படி - 40 பக்)

"ஹரப்பா, மொகஞ்சதாரோ நாகரீகம் இந்திய உபகண்டத்தின் ஒரு பரந்த பிரதேசத்தில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே - கி.மு. 3250-லேயே இருந்ததாக இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித்துறையின் நிறுவனர் ஜான் மார்ஷல் வரையறுத்துக் கூறியுள்ளார். கி.மு. 1700 வரை இந்நாகரீக சமுதாய வாழ்க்கை முறை நீடித்து இருந்து வந்தது என்று கண்டறியப்பட்டுள்ளது. இடைக்காலத்தில் இச்சமுதாயத்தில் ஏற்பட்ட உள் முரண்பாடுகள், இயற்கையின் சீற்றம், பூகம்பம், சிந்து நதியின் போக்கில் ஏற்பட்ட மாறுதல், வறட்சி - இத்தகைய பல்வேறு காரணங்களால் பல பகுதிகள் புதையுண்டு போயின. எஞ்சியவர்கள் பலவீனமடைந்தனர். இறுதியாக ஆரியர்களின் படையெடுப்பு ஹரப்பா - மொகஞ்சதாரோ நாகரீகத்தின் - சிந்து நாகரீகத்தின் தனித்தன்மையை முற்றாக அழித்தது".

> வேத நாகரீகத்தை உருவாக்கிய ஆரியர்கள்தாம் கிருத்துவ இஸ்லாம் மதங்களையும் உருவாக்கினார்கள் என்று கூறுவதன் மூலம் வரலாற்றுப் புரட்டில் கோயபல்ஸை மிஞ்சுகிறார் நம்பூதிரிபாட்.

"ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்ட பல்வேறு காரணங்களினால் ஹரப்பா - மொகஞ்சதாரோ நாகரீகம், சிந்து நாகரீகம் அழிந்து வந்த காலத்தில்தான் ஆரியர்கள் இந்திய உபகண்டத்துக்குள் நுழைந்தனர். இவர்கள் எங்கிருந்து வந்தனர்? எவ்வழியாக வந்தனர்? இவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்ததாகப் பொதுவாகக் கருதப்படுகிறது. இவர்கள் ஆப்கானிஸ்தான் வழியாகவோ அல்லது ஈரான் வழியாகவோ வந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. மத்திய ஆசியப் பகுதியிலிருந்து (முன்னாள் சோவியத்தின் உஸ்பெக் குடியரசுப் பகுதி) புறப்பட்ட ஆரியப்பூர்வகுடியினர் பல்வேறு காலங்களிலும் பல்வேறு மார்க்கங்களிலும் இந்திய உபகண்டத்தில் குடியேறினர். கி.மு. இரண்டாயிரத்துக்குப் பின்னர்தான் ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தனர். என்பது தான் பொதுவாக வரலாற்று ஆசிரியர்கள் கருத்து".

"ஆரியர்கள் பல கோத்திரங்களாக இந்தியா வந்தனர். யமுனை, கங்கை நதிக்கரைகளில் குறிப்பாக கங்கை நதிக்கரையில் இவர்கள் குடியேறினர். ஆகவே ஆரிய நாகரீகம் கங்கை நதிக்கரை நாகரீகம் என்று அழைக்கப்படுகின்றது. இந்தியாவின் வடக்கிலும் மேற்கிலும் பரவியிருந்த ஹரப்பா - மொஹஞ்சதாரோ நாகரீகத்தை உருவாக்கிய திராவிட இன மக்களுடன் போரிட்டும், இரண்டற இணைந்தும் தங்களை இங்கு நிலைநாட்டிக் கொண்டனர். இந்திய உபகண்டத்தில் ஆரியர்களின் குடியேற்றம் பல்வேறு முறைகளில் நிகழ்ந்தது. சோவியத் வரலாற்று ஆசிரியர்கள் எழுதியுள்ள 'இந்தியாவின் வரலாறு' என்னும் நூலில் இவ்வாறு கூறுகின்றனர்":

"பல்வேறு பிரதேசங்களில் இந்தோ - ஆரியர்களின் குடியேற்றம் ஒரே மாதிரியாக நிகழவில்லை என்பது கூறாமலே விளங்கும். பல்வேறு இனக்குழுக்களோடு அவர்களுடைய பரஸ்பர பாதிப்பும் வெவ்வேறு வகையில் நிகழ்ந்தது. மொழி இயல், தொல் பொருள் இயல் சான்றுகளைக் கொண்டு பார்க்கும் போது பஞ்சாபில் ஆரியர்கள் முதன்மையாக திராவிட இனக்குழுக்களுடன் கலந்து பழகத் தொடங்கினார்கள். தன்மயமாக்கும் நிகழ்வு முறை இங்கே கணிசமாக விரைவில் நடந்தேறியது. முன்னர் மிக உயர்ந்த நிலையிலிருந்த பண்பாட்டின் ஒரு சில மரபுகள் அனேக வட்டாரங்களில் இன்னும் எஞ்சி இருந்தமையால் ஆரியர்கள் வட்டார மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார்கள். கிழக்கு பஞ்சாபில் சில பிரதேசங்களில் வட்டார இனக்குழுக்கள் ஆரியர்களைத் தீவிரமாக எதிர்க்கவில்லை. எனவே, அவர்கள் புதிய நிலப்பரப்புகளில் குடியேறியவாறு விரைந்து கிழக்கே சென்றார்கள். வேத இனக் குழுக்களின் மொழியிலும் இது பிரதிபலித்தது. திராவிட மொழிகள் இந்தோ - ஆரிய மொழிகளின் மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்தின என்று ரிக்வேதத்தின் மற்றும் பிற வேத சம்ஹிதைகளின் மொழி இயல் பகுப்பாய்வுகள் காட்டியது. ஆனால், இந்த பரஸ்பர பாதிப்பு நீடிக்கவில்லை".

'இந்தியாவின் கிழக்குப் பிரதேசங்களில் வசித்த முண்டா இனக் குழுக்களுடன் இந்தோ - ஆரியர்களின் பரஸ்பர பாதிப்பு வேறு வகையில் நிகழ்ந்தது. பல முண்டா இனக் குழுக்கள் வேத இனக் குழுக்களால் காட்டுப் பிரதேசங்களுக்கு விரட்டியடிக்கப்பட்டன". ('மார்க்சிஸ்ட்' மாத இதழ், பி.ஆர். பரமேசுவரன் பக். 22-27)

ஆக, மேற்கண்டவற்றில் இருந்து

படிப்பகம்

www.padippakam.com

பார்க்கும்போது சி.பி.எம்.மின் குட்டி சித்தாந்தக் குரு பி.ஆர். பரமேசுவரன் எழுதி வருவன பல விசயங்களில் ராமமூர்த்தி, நம்பூதிரியின் கோட்பாடுகள், முடிவுகளுக்கு மாறாக இருப்பது தெரிகிறது. ஆரியர்கள் அன்னிய பூர்வகுடியினர்தாம், வெளியிலிருந்து வந்த ஆக்கிரமிப்பாளர்கள்தாம்; மொகஞ்சதாரோ - ஹரப்பாவில் கண்டுபிடிக்கப்பட்ட சிந்துவெளி நாகரீகம் என்பது திராவிட பூர்வகுடி இனத்தவருடையதுதான் என்பதை ஆதாரங்களுடன் ஒப்புக் கொள்கிறார் பரமேசுவரன்.

அதே சமயம், தன்பங்குக்கு நம்பூதியின் வரலாற்றுப் புரட்டுகள் சிலவற்றை நியாயப்படுத்தவும் செய்கிறார், பரமேசுவரன். 'சிந்துவெளி நாகரீகம் உள் முரண்பாடு - போர்களினாலோ, இயற்கை சீற்றங்களினாலோ அழிந்து போய் அங்கு ஒரு கலாச்சார சூனியநிலை நிலவிய போது, அப்பகுதியை ஆக்கிரமித்த ஆரியர்கள் ஒரு புதிய சமூக அமைப்பை உருவாக்கி முன்னேறினர்' என்கிற சங்கரன் நம்பூதிரியின் கண்டுபிடிப்பை பரமேசுவரன் நியாயப்படுத்துகிறார். ஆனால் அவரே காட்டியுள்ள மேற்கோளில் டி.டி. கோசாம்பி பின்வருமாறு எழுதியுள்ளார்.

''ஆரியப் பண்பாடு என்று பேசும் போது அதன் பொருளைத் தெளிவாக்குவது அவசியம். கி.மு. மூன்றாயிரமாவது ஆண்டு காலத்தின் பெருநகரப் பண்பாடுகளுடன் ஒப்பிடும்போது, ஆரியர்கள் நாகரீகமற்றவர்கள்; அவ்வுயர்ந்த பண்பாடுகளை அவர்கள் தாக்கியதோடு மட்டுமல்லாமல் அநேக தடவைகள் சின்னாபின்னமும் செய்துள்ளனர்......... அவ்வாறு தாக்குண்ட மக்களுக்கு ஆரிய எழுச்சி ஏற்படுத்திய அழிவுகள் அனேக தடவைகள் ஈடு செய்ய முடியாத அளவில் உள்ளன'' (1990, நவம்பர் 'மார்க்சிஸ்ட்' இதழில் மேற்கோள் பக்: 36-37)

ஆரியர்களின் ஆக்கிரமிப்பு - அழிவு பற்றிய இந்தக் கருத்தை மேற்கோள் காட்டிய அதே பரமேசுவரன் பின்வருமாறும் எழுதுகிறார்: ''இந்தியாவின் பூர்வகுடி மக்களான திராவிடர்கள் உருவாக்கிய மொகஞ்சதாரோ - ஹரப்பா நாகரீகம் அழிந்து போனபின் - புதையுண்டு போனபின் ஏற்பட்ட நாகரீகத்தின் சூழ்நிலையில் ஆரியர்கள் இந்தியா வந்தடைந்தனர் என்பதே வரலாற்றாசிரியர் பலரின் கருத்து. பி.ஜே.பி. இந்து வகுப்புவாதக் கும்பல் கூறுவதுபோல், ஆரியர்கள் இந்தியாவின் பூர்வகுடி மக்களல்லர் என்பதுதான் உள்நாட்டு, அயல்நாட்டு வரலாற்று ஆசிரியர் பெரும்பாலோரின் கருத்து'' ('93 அக். 'மார்க்சிஸ்ட்' இதழ் பக் 31)

''ஆரியர்கள் இந்தியாவின் பூர்வகுடி மக்களல்லர்'' என்று பி.ஜே.பி. இந்து வகுப்புவாதக்கும்பலுக்கு மறுப்புச் சொல்லும் பரமேசுவரன், அதே கருத்தை சுற்றி வளைத்துச் சொல்லும் நம்பூதிரிக்கும் தானே மறுப்புச் சொல்ல வேண்டும்? மொகஞ்சதாரோ - ஹரப்பா நாகரீகம் திராவிடர் உருவாக்கியது என்பதையும் அவருக்கு இடித்துரைக்க வேண்டும்?

ஆனால், அவ்வாறு செய்யாதது மட்டுமல்ல, ஆதாரங்கள் பல இருந்த போதும் தீராத பிரச்சினைகள் என்று சந்தேகம் எழுப்பும் வகையில் அவரே பின்வருமாறு மழுப்பியுள்ளார்.

### நம்பூதிரிக்கு முட்டுக் கொடுக்கிறார் பரமேசுவரன்!

''சிந்து சமவெளி நாகரீக மக்கள் எழுத்து வடிவம் கொண்ட மொழியினையும் கொண்டிருந்தனர். அந்த எழுத்து வடிவங்களை தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கண்டெடுத்துள்ளனர். ஆனால், அவைகளை இன்று வரையிலும் யாராலும் படித்தறிய முடியவில்லை. ஆகவே அவை இன்றைய இந்தியமொழிகளில் எதனையும் ஒத்ததாக இல்லை என்பது தெளிவாகிறது''

**பி.ஜே.பி. கூறுவது போல் ஆரியர்கள் இந்தியாவின் பூர்வகுடிகள் அல்ல என்று கூறுகிறார் பி.ஆர். பரமேஸ்வரன். இந்த உண்மையை தம் தலைவர் நம்பூதிரியிடம் அவர் முதலில் தெரிவிக்கட்டும்.**

''ஆரியர்கள் வருவதற்கு முன்னால் இந்திய உபகண்டத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் ஒரே இனத்தவர்களா? அனைவரும் திராவிடர்களா? வேறு இனத்தவர் எவரும் இருந்ததில்லையா? அவர்களின் பூர்வீகம் என்ன? எங்கிருந்து வந்தனர் என்பது போன்ற ஏராளமான பிரச்சினைகளுக்கு விடை காண வேண்டியுள்ளது. உலக நிலப்பிரப்பில் முதன் முதலாக குரங்கிலிருந்து மனிதனாக மாறிய நிகழ்ச்சிப் போக்கு நடந்தேறிய பிரதேசங்களில் இந்தியக் கண்டமும் ஒன்றாக இருக்கலாம் என்பது சில சோவியத் விஞ்ஞானிகளின் கருத்து. ஆகவே இந்திய உபகண்டத்து மக்கள் வேறு எங்கிருந்தாவது வந்தவர்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை'' ('93 டிசம்பர் 'மார்க்சிஸ்ட்' இதழ் பக்: 22-23)

சிந்து சமவெளி நாகரீக மொழி - எழுத்து திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததுதான். திராவிட, முண்டா, நாகா ஆகியோர் இந்தியத் துணைக் கண்டப் பூர்வகுடி இனத்தவர்கள் என்பது ஆதாரபூர்வமாக நிருபிக்கப்பட்ட பின்னும் குழப்பும் நோக்கத்துடனேயே எழுதுகிறார், பரமேசுவரன் ஏனென்றால்,

''திராவிட மொழிகள் இந்தோ - ஆரிய மொழிகளின் மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்தின என்று ரிக்வேதத்தின் மற்றும் பிறவேத சம்ஹிதைகளின் மொழி இயல் பகுப்பாய்வுகள் காட்டின'' என்று சோவியத் அறிஞர்களின் முடிவுகளை மேற்கோள் காட்டும் பரமேசுவரன், ''சிந்து சமவெளியில் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துக்களை யாரும் படித்தறியவில்லை; அவை இன்றைய மொழிகளில் எதனையும் ஒத்ததாக இல்லை'' என்று சாதிக்கிறார்.

எவ்வாறாயினும் ஆரிய ஆக்கிரமிப்பு - அழிவு வேலைகளை மறைத்து அல்லது அவர்கள் அவ்வளவு ஒன்றும் அழிவை ஏற்படுத்திவிடவில்லை, அதற்குமாறாக ஆக்கப்பணிகள் புரிந்துள்ளனர் என்று சித்திரிப்பதே அவர்களின் நோக்கம். இந்த நோக்கத்தோடு ஆரியர்களின் புகழை ஏற்றிப் போற்றும் வகையில் இன்னொரு புளுகையும் அவிழ்த்துவிட்டுள்ளனர்.

### இமாலயப் புரட்டு!

''மத்திய ஆசியாவிலிருந்து புறப்பட்ட ஆரிய பூர்வகுடியினர் கிழக்கில் இந்தியா, ஈரான் போன்ற நாடுகளுக்கும் மேற்கில் கிரீஸ், ரோம் போன்ற நாடுகளுக்கும் மேற்கு ஆசிய நாடுகளுக்கும் சென்றனர். இன்று இந்துவும், இசுலாமும், கிறித்தவமும் முற்றிலும் மாறுபட்ட, முரண்பட்ட மதங்களாகக் காட்சியளிக்கின்றன. ஆனால், இவைகளைத் தோற்றுவித்தவர்களின் முன்னோர்கள் அனைவரும் ஒரே இடத்திலிருந்து புறப்பட்டு பல்வேறு திசைகளை நோக்கிச் சென்றவர்கள்தான் என்பது சிந்தனைக்குரிய செய்தியல்லவா? தோழர் இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்கள் இதைப்பற்றி கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்:

''வேத நாகரீகத்தை உருவாக்கிய மக்கள் பகுதியினரும், பிறகு இஸ்லாமிய, கிறித்துவ மதங்களை உருவாக்கியவர்களும் ஆரம்ப சரித்திர காலகட்டத்தில் ஒரே நிலப்பரப்பில் வாழ்ந்தவர்கள் தான்!''

அரபு, செமட்டிக் பூர்வகுடியினத்தவர்களே இஸ்லாமிய, கிறித்துவ மதங்களை உருவாக்கியவர்கள் என்பது உலகமறிந்த உண்மை. இருந்தபோதும், நாஜி இட்லரையும், அவரது சித்தாந்த குரு நீட்சேயையும் மிஞ்சும் அளவுக்கு, உலக மதங்களையும், பண்பாடுகளையும் உருவாக்கியவர்கள் தமது பூர்வகுடி முன்னோர்களான ஆரியர்களே என்று சங்கரன் நம்பூதிரியும் அவரது சீடர்களும் உரிமை பாராட்டிக் கொள்கிறார்கள்.

—தொடரும்

படிப்பகம்

www.padippakam.com

அவ்வளவு ஏன், பெண்கள் நாடாளக்கூடாது என்பதுதானே இஸ்லாமியக் கோட்பாடு? தஸ்லிமாவுக்கு எதிராகப் போராடுவதற்கு முன்னால் வங்க தேசத்தின் பெண் அதிபருக்கு எதிராகவல்லவா அவர்கள் போராட வேண்டும்?

இஸ்லாமிய தத்துவம், கோட்பாடு போன்ற மண்டைகனக்கும் விஷயம் கூட வேண்டாம். சாதாரண சகோதரத்துவ கோட்பாட்டின் படி பார்த்தாலும் சவுதி செய்வது சரியா? ஈவிரக்கமற்ற முறையில் ஈராக் மீது குண்டுமாரி பொழிந்தது அமெரிக்கா.

ஈராக்கிய (முஸ்லீம்) குழந்தைகளை வியாபாரத்தடை மூலம் இன்னும் பட்டினி போடுகிறது. அந்த அமெரிக்காவின் கூட்டாளியான சவூதி அரசு இஸ்லாமிய துரோகி இல்லையா? 'சாத்தான்' இல்லையா? ஹஜ் யாத்திரை சென்ற முஸ்லீம்கள் சவூதி ஷேக்குகள் மீதல்லவா கல்லெறிந்திருக்க வேண்டும்? இந்தியாவில் சதாம் உசேனுக்கு ஜிந்தாபாத் போட்டு என்ன பயன்?

முஸ்லீம்களை கொல்லும் செர்பியாவுக்கு ருமேனியா வழியாக எண்ணெய் விற்றுப் பணம் கொள்ளை அடிக்கிறது ஈரான். குர்ரானில் எத்தனையாவது சூராவில் எத்தனையாவது வசனத்தின் படி ஈரானின் நடத்தைக்கு அங்கீகாரம் இருக்கிறது?

யுகேஸ்லோவியா - சராஜெவோ முஸ்லீம்களுக்காக உககெங்கிருந்தும் அனுப்பப்பட்ட 1747 விமான லோடுகள் உதவியில் மொத்த முஸ்லீம் உலகம் அனுப்பிய உதவி வெறும் 30 லோடுகள் மட்டுமே. இதுதான் இஸ்லாமியச் சகோதரத்துவமா? உலகளாவிய தரும நெறியா?

குரான் காலத்துக்கு ஒவ்வாதது என்று ஒருவர் விமரிசித்தால் காது கொடுத்து முல்லாக்கள் முதலில் கேட்கட்டும். குரான் காலத்தில் அடிமைத்தனம் இருந்தது; தோற்கடிக்கப்பட்ட நாடுகளில் கிடைக்கும் பெண்களை 'சட்டப்படி உரிமையாக்கிக் கொள்ள' (வசனம் 33:50) அனுமதி கொடுக்கிறது குரான். முஸ்லீம் பேரரசில் வெள்ளமெனப் பெருகிய அடிமைகள் பற்றி வரலாறு ஏராளமாகக் கூறுகிறது. மூஸா பின் நூஸைர், ஆப்பிரிக்காவிலிருந்து 3 லட்சம் அடிமைகளைப் பிடித்து வந்ததும், ஸ்பெயினில் காதிக் (GOTHIC) பிரபுக்கள் குடும்பங்களிலிருந்து 30,000 கன்னிப் பெண்களைக் கைப்பற்றியதும் வரலாறு. அடிமைகளைச் சட்டப்படி உரிமையாக்கிக் கொள்ள குரான் வழங்கும் அனுமதி இப்போது செல்லுமா? அதை அமல் படுத்தக் கோருவார்களா இந்த மதவெறியர்கள்? முகமது நபி காலத்திலேயே இருந்தாலும், அடிமைத்தனம் சகோதரபாசத்துக்கு நேர் எதிர் அல்லவா? இது ஒரு சோற்றுப்பதம்தான்.



'தாஸ்லிமாவுக்கு மரணதண்டனை வழங்கு!' பங்களாதேஷ் மதவெறியர்கள் ஆர்ப்பாட்டம்

இன்னும் எவ்வளவோ இருக்கிறது.

குரான் காலத்துக்கு ஒவ்வாதது என்று வரலாறு நிரூபித்து வருகிறது. அதை முஸ்லீம்களே நிரூபிக்கிறார்கள். ஆண் ஆதிக்கவாதிகளும் பணம் படைத்தவர்களும் மத முகமூடி போட்டு நாடகம் ஆடுகிறார்கள். விமரிசிப்பவர்களை எதிர்ப்பவர்களின் உண்மை முகம் இதுவே.

கலீஃபா உத்மான சொந்த உறவினர்களுக்கு அரசுக்கருவூலத்தில் கைவைத்து தாராளமாகச் செலவு செய்தார். ஆனால், இவருக்கு முன்னாலிருந்த கலீஃபா உமர் அப்படிச் செய்யவில்லை - அவர் கடுமையான ஒழுக்கவாதி. உத்மான் சொன்னாராம்; ''உமர் இறை பயத்தினால் உறவினர்களுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை; நான் இறை பயத்தினாலேயே உறவினர்களுக்குக் கொடுக்கிறேன்''. குரானில் வரும் உறவினரைப் பாதுகாப்பது குறித்த 'ஸிலா-ஏ-ரஹ்மி' என்று பண்பை உத்மான் என்ன 'நயமாக'க் கையாண்டார் பார்த்தீர்களா? உமரும் குர்ஆனைக் காட்டினார்; உத்மனும் குரானைத்தான் காட்டுகிறார். குரானை எப்படி வளைக்கலாம் என்று முகமதுநபி மறைந்து 30 ஆண்டுகளிலேயே வளைத்துக் காட்டி வரலாறும் படைத்து விட்டார்கள் முஸ்லீம் ஆட்சியாளர்கள். வரலாற்றுக்குப் பதில் சொல்ல வக்கற்றவர்கள் தஸ்லிமாவைத் தூக்கில் போடத் துடிக்கிறார்கள்.

இந்தியாவில் ஷாபானு வழக்கில் நியாயமான ஜீவாம்சத்தை மறுத்து முல்லாக்களுக்கு வக்காலத்து வாங்கியது காங்கிரசு. இப்போது உத்தரப்பிரதேசசிவில் வழக்கொன்றில் நிலச் சொத்து விவிகாரத்தில் தொடங்கி, மும்முறை தலாக் கூறி (ORAL) விவகாரத்து செய்வது செல்லுபடியாகாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. உடனே சீர்திருத்தம் பற்றிக் கூட சிந்திக்காமல் அவசர அவசரமாக ஷரீஅத் கோர்ட்டுகளை சட்ட ரீதியாகவே அங்கீகரித்து விட்டது காங்கிரசு அரசு.

ஷரீஅத் சட்டங்கள் குரானிலிருந்தும், நபிகள் வாழ்க்கை அனுபவமான சுன்னாவிலிருந்தும் தொகுக்கப்பட்டவை என்று சொல்லப்படுகின்றன. இவை காலகாலமாக மாறாது காக்கப்படும் புனிதச் சரக்கு அல்ல; இஸ்லாமிய ஆட்சி நடக்கும் நாடுகளில் எத்தனையோ முறை இவை மாற்றப்பட்டு விட்டன.

ஷரீஅத் கோர்ட் முல்லாக்களின், ஆண்-ஆதிக்க, ஆளும்வர்க்க நபர்களின் கரங்களில் ஓர் ஆயுதம். முஸ்லீம் அல்லாதவர்களுக்கு இதனால் முஸ்லீம் பெண்கள், ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள் தான் பாதிப்படைவார்கள்.

அவர்கள் மத்தியிலிருந்து தஸ்லிமா போன்ற கலகக் குரல்கள் உருவாகி விடக் கூடாதென்றுதான் வெறியர்கள் காட்டுக் கூச்சல் போடுகிறார்கள். கலகக்குரல்கள் இல்லாமல் ஜனநாயகம் பிறக்காது; மத வெறியர்களுக்கு வரலாற்றுப் பாடங்கள் உதவுவதில்லை.

எவ்வளவுதான் உயர்ந்த நோக்கத்துக்காக ஒரு மதம் உருவாகியிருந்தாலும், காலம் கடந்தது என்றால் அது காலம் கடந்தது தான்.

ஒட்டகம் அருமையான பயண ஊர்தி; ஆனால் இன்றைய அராபிய ஷேக்குகள் ஒட்டகத்தின்மேல் பயணம் செய்வதில்லையே!. டெல்லி நட்சத்திர ஓட்டல்களில் வந்து தங்கும் ஷேக்குகளின் அறைக்கதவை உடைத்து உள்ளே நுழைந்து பாருங்கள், அவர் கரங்களில் குரான் தவழ்வதில்லை.

● க.மு

அட்டை ஓவியம்
மருது

படிப்பகம்

அசிரியரும் வெளியிடுபவரும்: வி.வல்லபேசன், 22, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சாலை சைதாப்பேட்டை, சென்னை 600 018

www.padippakam.com

PUTHIYA KALACHARAM R.N.42647/85 Regd No: TN/MS(S) 376

## குகைகள்

அவர்களின்
மிருகவெறி அக்கிரமங்கள்
என் இதயத்தைக் குடைந்து
எத்தனையோ
குகைகளை உருவாக்கியிருக்கின்றன

மாறிவரும் காலத்தைக் கவனித்தவாறு
கவனமாக
அடியெடுத்து வைக்க வேண்டும்
இந்தக் காட்டிற்குள்

காற்று எங்கள் பக்கம்

அங்குமிங்குமாய்க்
கலகத்தீப்பொறி பறக்கிறது

இத்தனை நாள்—
சரி தவறு இரண்டையும் கேட்பேன்;
மவுனமாக இருந்து கொள்வேன்

ஆனால் இனி நான்
மனித உரிமைகளுக்காக
எரிதழல் மூட்டுவேன்!

எப்படி வந்து சேர்ந்தோம்
இங்கே....
என்றுமே எமக்குத்
தாயாக இருந்திராத
இந்தப் பூமிக்கு?

ஒரு நாயாய், பூனையாய்க்கூட
எங்களை வாழ விடாத
இந்தப் பூமிக்குப்
பின் எப்படித்தான்
வந்து சேர்ந்தோம்?

மன்னிக்கவே முடியாத
அவர்களின் குற்றங்களே சாட்சிகள்
இதோ இங்கே
இப்போதே
நான் எழுகிறேன்
ஒரு கலகக்காரனாக.

- ஜோதி லஞ்சேவார்

## அந்த ஒற்றைக் கை

படங்கள் நிறைந்த புத்தகமொன்றைப்
புரட்டிக்கொண்டிருந்தேன்
எனது குட்டிப்பையன் ராஜா வந்தான்
தானும் எட்டிப் பார்த்தான்.

ஒரு படத்தில் —
ஏழை ஒருவனைப் பணக்காரன்
அடித்துக் கொண்டிருந்தான்.

ராஜா கேட்டான்:
'இவனை ஏம்பா அவன் அடிக்கிறான்?'
ஏனென்றால் அவன் பண்ணைக்காரன்.

அடுத்த பக்கத்தைப் புரட்டினேன்
மீண்டும் அதே பணக்காரன் - அவனது
ஓங்கிய வலது கையில் ஆயுதம்
அதே ஏழையைக் கொல்ல.

ராஜா இதைப் பார்த்தான்.
'ஒரு நிமிஷம் இருப்பா' —
எனக் கட்டளையிட்டான்.

வேகமாக மேசைக்கு ஓடிப்போய்
பிளேடு ஒன்றைக் கொண்டு வந்தான்

பணக்காரனின்
வலது கரத்தை தோளிலிருந்து
வெட்டி எடுத்து விட்டான்
பெருமிதம் அவன் முகத்தில்

நான் சொன்னேன்
அவனுக்கு ஆள்பலம் அதிகம்
சும்மா விடமாட்டார்கள்

ராஜா இடைமறித்தான்—
முடியாது, அவர்கள் அடிக்கமுடியாது
அந்த ஒற்றைக் கரத்தின் நினைப்பு
ஒரு போதும் மறவாது அவர்களுக்கு.

— திரியம்பக சப்காலே

'புதிய சூரியனுக்கு அனுமதி இல்லை'
நவீன மராத்தி தலித் கவிதைகள்-
ஆங்கில நூலிலிருந்து மொழியாக்கம்

படிப்பகம்